Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி 18 வியாழக்கிழமை (03-09-1998) UTHAYAN-A Lively National Tamil Daily சுடர்: 239

பொது சன நூலகம் -3 SEP 1998 மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# செம்மணிப் பகுதியில் புதைகுழி தோண்ட ஐ. நா. சபை உதவும்!

## ஆணைக்குழு பிரதிநிதி தகவல்

கொழும்பு, செப்டெம்பர் 3

**யாழ்ப்பாணம், செம்மணியில் மனிதப் புதைகுழி உள்ளதாகக் கூறப்படும் பகுதியில் தோண்டும் பணிகளுக்கு உதவ ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் மேரி றொபின்சன் இணக்கம் தெரிவித்துள்ளார்.**

அயர்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியான மேரி றொபின்சன் இந்தப் பணிக்கு தம்மால் வழங்கக் கூடிய உதவிகளை வழங்க இணங்கியுள்ளதாகவும்—

நிபுணர்களின் உதவியை வழங்குமாறு தாம் விடுத்த கோரிக்கையை ஏற்று நிபுணர் குழுவை அனுப்பவும் அவர் தயாராக இருக்கிறார் என்றும்— தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுப் பிரதிநிதி ஜவாட் யூசுப் தெரிவித்தார்.

ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதுவர் இந்த விடயம் குறித்து தொடர்ந்து தம்முடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் ஜவாட் யூசுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலை நடத்தக் கோரி ஐ. தே. க. மனுத் தாக்கல்

கொழும்பு, செப். 3

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் ஒத்தி வைக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கோரி ஐ. தே. க சார்பில் இரு மனுக்கள் நேற்று மாலை மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

மேல் மாகாண சபைக்குப் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்த சாஹுல் ஹமிட் முகமது, கே. ஜெயக்குமார் ஆகியோர் ஒரு மனுவையும்—

ஊவா மாகாணசபையில் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்த பேர்சி சமரவீர, சி. வேலாயுதம் ஆகியோர் மற்றொரு மனுவையும் — தாக்கல் செய்தனர்.

தேர்தல் ஆணையாளர், தெரிவத்தாட்சி அதிகாரிகள் அந்த மாவட்ட அரச அதிபர்கள், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

(இ-3-10)

# விடுதலைப் புலிகளுடன் அரசு பேச வேண்டும்

## அயர்லாந்து நிபுணரிடம் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 3

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையின்றிப் பேசவேண்டும். அதற்கு நாம் உதவிகளை வழங்குவோம்."

எதிர்க்கட்சித் தலைவரும், ஐ. தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரசித்திபெற்ற அயர்லாந்து மோதல் இணக்கப்பாட்டு நிபுணர் பேராசிரியர் தோமஸ் பிராண்ட் பிரேஸருடன் தமது அலுவலகத்தில் நேற்று நடத்திய பேச்சின் போதே ரணில் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

"எமது கட்சி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் நாம் புலிகளுடன் நிபந்தனையின்றிப் பேச்சு நடத்துவோம்" என்றும் ரணில் அவரிடம் கூறி

(12 ஆம் பக்கம் பார்க்க)

மெச்சந்தி ரோனி



அப்ப வெளிநாடு போனாலும் திருந்த மாட்டினம் போல ... !

# முல்லை. செயலகம் முன் நேற்று உண்ணாவிரதம்

வவுனியா, செப். 3

முல்லைத்தீவு செயலகம் முன்பாக நேற்றுக் காலை சுமார் 200 பேர் நீராகாரம் இன்றி உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

நிவாரண வெட்டை நீக்குமாறு கோரியே இந்த உண்ணாவிரதம் இடம்பெற்றது.

கடந்த 23 நாள்களாக முல்லைத்தீவு அரச செயலகம் முன்பாக மறியல் செய்து வந்த மக்களே நேற்று உண்ணாவிரதத்தை அனுஷ்டித்தனர்.

இந்த உண்ணாவிரதத்தில் பங்கு கொண்ட சிலர் மயக்கமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

நிவாரணவெட்டை நீக்கக் கோரி முல்லைத்தீவு செயலகம், புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் அலுவலகம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

சுவிஸில்

# இலங்கை தமிழர்கள் கோஷ்டி மோதல்

## புங்குடுதீவு இளைஞர் பலி!

சூரிச், செப். 3

சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரப்பகுதியில் இலங்கைத் தமிழர்களிடையே இடம்பெற்ற கோஷ்டிச் சண்டையில் இளைஞர் ஒருவர் கோரமாகக் கொலை செய்யப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை நடந்த இந்த மோதலில் புங்குடுதீவைச் சேர்ந்த கதிரேசன் சிறீதரன் (29 வயது) என்பவரே கொலையுண்டவராவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 1047 பயணிகளுடன் 'லங்கா முடித்த' புறப்பாடு

## இன்று காங்கேசன் வரும்

திருகோணமலை, செப். 3

திருகோணமலையில் இருந்து ஆயிரத்து 47 அகதிகளுடன் 'லங்காமுடித்த' கப்பல் நேற்று காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டது.

இன்று நண்பகல் அளவில் இக்கப்பல் காங்கேசன்துறை வந்துசேரும்.

அகதிகள் உடனடியாக அவர்களின் சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

அதேநேரம்—எதிர்வரும் 5 ஆம் திகதியும் திருகோணமலையில் இருந்து கப்பல் சேவை ஒன்று நடைபெறவிருப்பதாகவும்—

அக் கப்பலில் செல்வதற்காக வவுனியாவில் இருந்து 950 அகதிகளும், மன்னாரில் இருந்து 300 அகதிகளும் திருகோணமலை வந்துள்ளதாகவும்—தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம்—இன்று வரும் கப்பலில் குடாநாட்டுக்கான 250 தபால்ப் பொதிகளும் எடுத்துவரப்படுகின்றன.

# கிரனேட்டுடன் இளைஞர் மட்டக்களப்பில் கைது!

மட்டக்களப்பு, செப். 3

மட்டக்களப்பு நகரில் இளைஞர் ஒருவர் நேற்று கிரனேட்டுடன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

பெண் ஒருவரை சைக்கிளால் மோதிவிட்டு செல்ல முயன்ற இவரை பொலீஸார் தடுத்து விசாரித்த போது கிரனேட் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

கொக்கட்டிச்சோலை வாசியான ஆனந்தராஜா தம்பிராஜா என்ற மேற்படி இளைஞர் தாம் ரெலோ உறுப்பினர் எனத் தெரிவித்தாராம்.

பொலீஸார் ரெலோவுடன் தொடர்பு கொண்ட போது அந்த நபரைத் தெரியும். ஆனால் அவர் எமது உறுப்பினர் அல்ல என பதில் கிடைத்தது.

பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(இ-21)

# சூட்டுக்காயத்துடன் ஆஸ்பத்திரியில் சடலம்

## பொலீஸார் ஒப்படைத்தனர்

யாழ்ப்பாணம், செப். 3

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சமர் ஒன்றின் போது இடையில் அகப்பட்டு உயிரிழந்ததாகத் தெரிவித்து சுன்னாகம் பொலீஸாரால் நேற்று மாலை சடலம் ஒன்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

கந்தையா தம்பையா என்பவரின் சடலம் என அடையாளம் காணப்பட்டபோதும் அவர் தொடர்பாக வேறு தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் —

அந்தப் பகுதியில் ஊரடங்கு வேளையில் குறிப்பிட்ட நபர் மது போதையில் நடமாடியதாகவும் —

அவர் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த அவர் பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு இறந்ததாகவும் — அவரிடம் கசிப்பு இருந்ததாகவும்—படை வட்டாரங்கள் தெரிவித்தன.

# வன்னியில் மோதல்!

வவுனியா, செப். 3

கிளிநொச்சி, பரந்தன், முரசுமோட்டை, 2 ஆம் கட்டை ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாகச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

சேதங்கள் குறித்த உத்தியோகபூர்வமான தகவல்கள் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (இ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களகரமான திறப்பு விழா

## ஹரிணி ஹாட்வெயர்

என்னும் ஸ்தாபனத்தை

இன்று (03-09-1998) வியாழக்கிழமை

பகல் 11.30 மணி முதல் 1.00 மணி வரையுள்ள

சுபவேளையில் ஆரம்பிக்க இருப்பதால் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

164, ஸ்ரான்லி வீதி, பா. ஸ்ரீபாதன்
யாழ்ப்பாணம். (58905)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

எமது சக மாணவன்

ந. சர்வேஸ்வரனின்

அன்புத் தந்தையார்

## வேலுப்பிள்ளை நடராசா

அவர்கள் மறைந்து முப்பத்தொராவது நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

வணிகமாணி இறுதி வருட மாணவர்கள்,
இயக்குநர், விரிவுரையாளர்கள்,

பட்டப்படிப்புகள் கல்லூரி.

101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (58902)

## LIONS CLUB OF NALLUR

## நல்லூர் லயன்ஸ் கழகம்

## 10 ஆவது ஆண்டு

MONTHLY PROJECT = மாதாந்த செயற்திட்டம்

இலவச கண்பரிசோதனை முகாம்

கண்பரிசோதனையும் -
இலவச கண்ணாடி வழங்கலும்
கண்ணைக் குருடாவதிலிருந்து
பாதுகாக்கும் வழிமுறைகளும்

வைத்தியர்கள், மருத்துவபீட மாணவர்கள்
கண்ணாடி விற்பனை முன்னோடிகளான

எஸ். எம். பெர்ணாண்டோ

நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் முகாமில்
கண்பரிசோதனை செய்ய விரும்புபவர்கள்

லயன் ஆர். சுரேஸ்

தேவி தொலைத் தொடர்பு சேவை
ஆடியபாதம் வீதியில் பதிவு செய்து கொள்ளவும்.

காலம்: 06-09-1998 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9-00 மணி
இடம்: திருநெல்வேலி கலாமன்ற
சனசமூக நிலைய மண்டபம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

06 09-1998 இல் மருத்துவப் பரிசோதனை
முகாமும் இடம்பெறும்.
பங்கு கொண்டு பயன் பெறுக.

லயன் மா. தவபாலன்
தலைவர்
லயன்ஸ் கழகம், நல்லூர்.

விளம்பர உதவி:

தேவி தொலைத் தொடர்பு சேவை
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
T. Phone. 021 2142 (சி-4747)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

நாளை மறுதினம் சனிக்கிழமை ஓய்வூதிய சங்க உறுப்பினர்களுடன் இடம்பெற விருந்த கலந்துரையாடல் எதிர்வரும் 8 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

ரஜனி, மீனா
சரத்பாபு, செந்தில்
நடித்த

## முத்து

10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

## ராஜா 'B' திரை

யாழ்ப்பாணம்.

இன்று முதல்
ராம்கி -நெப்போலியன்
மன்சூர்அலிகான்,
ரோஜா நடித்த

ராஜாளி

(சி/4737)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி

சிவாஜி. முரளி,
ரோஜா நடித்த
என் ஆசை ராசாவே

அடுத்த வெளியீடு
அர்ஜுன்-சிம்ரான்
நடித்த
தாயின் மணிக்கொடி
(புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212223
(58891)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

இன்று மட்டும்
கார்த்திக், சௌந்தர்யா
நடித்த
பொன்னுமணி
திரைப்படக் கட்டுத்தாள (ரீல்ஸ்) படம்.
காட்சிகள்:- 10-30, 2-30
(58903)

## ஸ்ரீ செல்வா

திரையரங்கு
ஸ்ரான்லி வீதி.
10-30 — 2-30 மணி.
(பழைய நேரம்)
அர்ஜுன் - தபு
கவுண்டமணி நடித்த
தாயின் மணிக்கொடி
(CD தரமான பிரதி)
(58904)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் அண்ணாமலை

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டி தெற்கை வசிப்பிடமாகவும் தற்சமயம் 201 B, டாம் வீதி, கொழும்பில் வசித்தவருமாகிய ஆறுமுகம் அண்ணாமலை 30-08-98 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்றவர்களான ஆறுமுகம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற சின்னத்தங்கத்தின் கணவரும் காலஞ்சென்ற சந்திரசேகரம், குலசிங்கம், கந்தசாமி, சரஸ்வதி, கயிலநாதன், சத்தியதேவி (கனடா), சறோஜினிதேவி (சுவிஸ்), சகுந்தலாதேவி (சுவிஸ்), தேவராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உமாபதி (பிரான்ஸ்), இரத்தினராணி, கருணாவதி (இந்தியா), இரத்தினம் (ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்), காலஞ்சென்ற விஜயலட்சுமி, பாலகுருநாதன் (கனடா), கிருஷ்ணமூர்த்தி (சுவிஸ்), சிவலிங்கம் (சுவிஸ்), சிறிஸ்காந்தராசா (கனடா) ஆகியோரின் மாமனாரும், சர்மிளா, சஞ்ஜீவன், தாட்சாயினி, விபூசணன், தாரகா, தேவந்தி, செந்தூரன், தாஸ்பிரகாஸ், ஜெயப்பிரகாஸ், கோபிதா, சுஜி, கௌசலா, கீர்த்தனா, வீணா, பிரிந்தா, யாளசி, ஷாகினி, மதுரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3-9-98) வியாழன் பிற்பகல் பொரளையிலுள்ள ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பொரளையிலுள்ள கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அ. குலசிங்கம் (மகன்)

பிரகாஸ் றான்ஸ் போட் சேவிஸ். பிரகாஸ் ஏஜன்ஸி
112, டாம் வீதி, 457, காங்கேசன்துறை வீதி,
கொழும்பு- 12 யாழ்ப்பாணம்.

(58874)

## முருகேசு நல்லதம்பி

சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சரவணையை வதிவிடமாகக் கொண்டவருமான முருகேசு நல்லதம்பி அவர்கள் சாவகச்சேரியில் 31- 8- 98 அதிகாலை காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம். அன்னார் முருகேசு வள்ளியம்மையின் அன்புப் புதல்வரும் யோகம்மாவின் அன்புக்கணவரும் சுப்பிரமணியம் வள்ளியம்மையின் அன்பு மருமகனும் யோகராஜா (சுவிஸ்), காலஞ்சென்ற நவரெத்தினராஜா, மோகனராஜா (சூடிபல் பொருள் விற்பனை நிலையம்) சுதா, ஹரி, சிறீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகிர்தா (சுவிஸ்), சிவபாலசுந்தரன் (உதவித் தேர்தல் ஆணையாளர், மட்டக்களப்பு) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி, நாகம்மா, அன்னலெட்சுமி ஆகியோரினதும் பராசக்தி, மாணிக்கம் ஆகியோரினதும் அன்புச் சகோதரனும் சிவயோகம் (கனடா) புஸ்பராணி, காலஞ்சென்ற தர்மகுணசிங்கம், தர்மராஜா (சுவிஸ்) [illegible]ணகுலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் தேனுகா, ஆரணி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 03—09—98 இன்று வியாழக்கிழமைகாலை 10.30 மணியளவில், 497, நுணாவில் கிழக்கு சாவகச்சேரி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகக் கண்ணாடிப் பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

மனைவி, பிள்ளைகள்.

497, நுணாவில் கிழக்கு,
[ யூனியன் பேக்கரி அருகாமை ]
சாவகச்சேரி.

[58879]

## சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்

(புகையிலைக் கடை மணியம், கிளிநொச்சி சந்தை)

இணுவில் மேற்கு வட்டுவினியைப் பிறப்பிடமாகவும், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் காலமானார்.

அன்னார் சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சிதம்பரசேகரம் (பிரான்ஸ்), சோமசேகரம் (வர்த்தகர், கிளிநொச்சி), குமாரசேகரம் (பிரான்ஸ்), இராசலட்சுமி, விஜயசேகரம் (பிரான்ஸ்), பாக்கியலட்சுமி (சுவிஸ்), குலசேகரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சோ. சந்திரசேகரம் (நல்லூர் ப. நோ. கூ. சங்கம்), சூரியகுமார் (சுவிஸ்), பொன்மணி, பத்மரஜனி, யோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மைதிலி, மயூரன், அச்சுதன், கீசகன், சியாமினி, சோமப்பிரியா, சோமலேஜினி, கீர்த்திகரன், நிந்துஜா, ரூபினி, திவாகினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (03—09 98) வியாழக்கிழமை பகல் 11.30 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

சோ. சந்திரசேகரம்
(மருமகன்)

''தாயகம்'',
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(58898)

உ

## தசாக கிருஹயக்ஞம்

அன்புடையீர்!

வெகுதானிய வருஷம் ஆவணி மாதம் 9 ஆம் நாள் [ 25-08-98 ]
செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத்தந்தையார்

## சிவஸ்ரீ ப. வேதக்குட்டிக் குருக்கள்

அவர்களின ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

ஆவணி மீ 18 ஆம் [3-9-98] நாள் வியாழன் காலை தசாகம்
ஆவணி மீ 19 ஆம் [4-9-98] நாள் வெள்ளி காலை 10.00 மணிக்கு ஏகோதிஷ்டம், மாசியம்
ஆவணி மீ 20 ஆம் நாள் [5-9-98] சனிகாலை 11.00 மணிக்கு சபிண்டீகரணம்
ஆவணி மீ 21 ஆம் [6-9-98] நாள் ஞாயிறுகாலை 11 மணிக்கு கிருஹயக்ஞம்

உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் யாவரையும் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள்.

ஆவரங்கால், புத்தூர்.

[58896]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பொலிஸ்மா அதிபருக்கு தொல்லை கொடுக்க வேண்டாம்

## அமைச்சர்களுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, செப். 3

பொலிஸ் அதிகாரிகளின் மாற்றங்கள், பதவி உயர்வுகள் தொடர்பாக புதிய பொலிஸ் மா அதிபருக்குத் தொல்லை கொடுக்க வேண்டாம்என ஜனாதிபதி அமைச்சர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

புதிய பொலிஸ் மா அதிபராக லக்கி கொடித்துவக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என அமைச்சரவைக்கு ஜனாதிபதி தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடமைகளின்தேவை அடிப்படையிலேயே பொலிசாருக்கு மாற்றம் வழங்கப்படுவதாகவும்—

அவ்விடயத்தில் பொலிஸ் மா அதிபருக்குத் தொல்லை கொடுத்தால் பொலிஸ் திணைக்கள நிர்வாகத்தை உரிய முறையில் நிறைவேற்ற முடியாது எனவும்—

ஜனாதிபதி அமைச்சர்களுக்குத் தெரிவித்தார்.

எந்தவொரு பொலிஸ் அதிகாரி மீதும் முறைப்பாடுகள் இருக்குமானால் அதுகுறித்து தன்னிடம் தெரிவிக்குமாறு ஜனாதிபதி குறிப்பிட்டாராம்.

(உ-10)

# இராணுவ வாகன இலக்கங்கள் கைதான இளைஞருக்கு அத்துப்படி!

கொழும்பு, செப். 3

கடந்த வாரம் பம்பலப்பிட்டியில் இராணுவக் கப்டன் சஞ்ஜீவ விக்கிரமரத்ன மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட பின்னர் தப்பிச் செல்கையில் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும்— நாவல திறந்த பல்கலைக்கழ மாணவனான— வடிவேலு திவாகரன் பலகாலமாக இராணுவ உயரதிகாரிகள் செல்லும் வாகனங்கள் குறித்து மிகவும் அக்கறை கொண்டிருந்தார் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முப்படைகள் மற்றும் பொலிஸைச் சேர்ந்த பத்து உயர் அதிகாரிகள் தினமும் பயணஞ் செய்யும் வாகனங்களின் இலக்கங்களைக் கூட அவர் நினைவில் வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அதிகாரிகள் செல்லும் வாகனங்களைக் கண்காணிப்பதில் சுரேஷ் என்பவர் இவருக்கு உதவி வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

—இவ்வாறு 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்தது.

(உ-10)

## வள்ளச்சாலை அமைப்பு

யாழ்ப்பாணம், செப். 3

குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் வள்ளங்களைத் திருத்தி புனரமைப்பதற்கான வள்ளச்சாலை ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. உதவித்திட்டத்தின் கீழ் ஏற்கனவே குருநகரில் அமைக்கப்பட்ட வள்ளச்சாலையின் பணிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடனேயே புதிய வள்ளச்சாலை ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-7)

# ம. எண்ணெய்க்கும் வவுனியாவில் பங்கீடு!

வவுனியா, செப். 3

வவுனியா மாவட்டத்தில் பங்கீட்டு அடிப்படையிலான மண்எண்ணெய் விநியோகம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விநியோகத்துக்கான கூப்பன்கள் வழங்கப்பட்டு வருவதாக வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

பொதுமக்கள் இந்தக் கூப்பனைக் கையளித்து எரிபொருள் முகவர்களிடம் தமது கோட்டாவைப் பெறலாம் என அவர் அறிவித்துள்ளார்.

மின்சார வசதி உள்ள வீட்டுக்காரர்களுக்கு மாதாந்தம் 3 லீற்றரும், மின்சாரவசதியற்ற வீட்டுக்காரர்களுக்கு மாதாந்தம் 10 லீற்றரும் மண்எண்ணெய் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(உ-10-3)

## கணவனை இழந்த

# குடும்பப் பெண்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், செப். 3

அண்மைக் காலங்களில் இடம்பெற்ற வன்செயல் நடவடிக்கைகளின் போது கணவனை இழந்த—குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த— 30 குடும்பப் பெண்களுக்குச் சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் கடனாக நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் யாழ். செயலகத்துடன் இணைந்து இத் திட்டத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பெண்களுக்கும் தலா ஐயாயிரம் ரூபா வீதம் உதவி வழங்கப்படுமெனவும்—

நிதியுதவி பெறுபவர்கள் சுழற்சி முறையில் அதனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமெனவும்—

குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

(உ-7)

## மோசமான வீதி

யாழ்ப்பாணம், செப். 3

யாழ் ஆயர் இல்லத்திற்கு பின்புறமாகவுள்ள குருசோ வீதி மற்றும் அச்சகவீதி என்பன கடந்த 10 வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாத நிலையில் குண்டும், குழியுமாகக் காணப்படுகிறன.

மேற்படி வீதிகளைப்புனரமைப்புச் செய்யுமாறு இப் பகுதி மக்கள் பலதடவை மாநகர சபையிடம் முறையிட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென குறை கூறப்படுகின்றது.

(உ-7)

## யாழ். மாவட்டத்தில்

# 9 நாற்று மேடைகளில் 35,000தேங்காய்விதைகள்

யாழ்ப்பாணம். செப். 3

யாழ். மாவட்டத்தில் ஒன்பது கமநல கேந்திர நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள தென்னை நாற்று மேடைகளில் 35 ஆயிரம் விதை தேங்காய்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர், கைதடி, சாவகச்சேரி, உரும்பிராய், புத்தூர், உடுவில், கீரிமலை, தொல்புரம், புலோலி ஆகிய இடங்களிலுள்ள கமநல கேந்திர நிலையங்களிலே தென்னைநாற்று மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(உ-5)

# நேரக் கட்டுப்பாட்டால் குருநகர் மீனவர் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 3

வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் குருநகர்க் கடலில் கடற்றொழில் செய்வதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளதால் கடற்றொழிலாளர்கள் தமது கடலுற்பத்திப் பொருள்களை உரிய நேரத்தில் சந்தைப்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை 5மணிக்கு கடற்றொழிலுக்கு அனுமதிக்கப்படுகின்ற கடற்றொழிலாளர்கள் தொழிலை முடித்துக் கொண்டுபிற்பகல் 2மணிக்கே கரையை வந்தடைகின்றனர்.

இதனால்தொழிலாளர்கள் தம்மால்பிடிக்கப்பட்ட மீன், இறால், நண்டு முதலியவற்றைச் சந்தைப்படுத்த முடியாது திண்டாடுகின்றனர். இப் பொருள்களைப் பழுதடையாது பாதுகாப்பதற்கானவசதியில்லாததால் அவை வீணாகக் கொட்டப்படும் நிலையே காணப்படுகின்றது.

பலத்த கஷ்டங்களுக்கு மத்தியில் தாம் மேற்கொள்ளும் தொழில் மூலம் உரிய பலனைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையேற்பட்டுள்ளதாக குருநகர்ப்பகுதி கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(உ-7)

## சரண்

கொழும்பு, செப். 3

காலி கிரிக்கெட் மைதான ஆடு களத்தில் கழிவு ஒயில் ஊற்றி சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பாகதேடப்பட்டு வந்த நபர் நேற்று முன்தினம் காலி நீதிமன்றத்தில் சட்டத்தரணி மூலம் சரணடைந்தார்.

காலி மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவர் பதவி வகிக்கும் அவரை பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். (உ-10-3)

## 'யுனிசெவ்' உதவியுடன்

# முன்பள்ளி ஆசிரியர்கள் 600 பேருக்கு பயிற்சிநெறி

யாழ். மாவட்டத்திலுள்ள அறுநூறு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் பாலர்கல்வி பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

வடமராட்சி, தென்மராட்சி, வலி.கிழக்கு, வலி. மேற்கு, தீவகம்ஆகிய ஐந்து பகுதிகளிலுமுள்ள 459 முன்பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கேஇந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஒரு பிரிவில் சுமார் 40 ஆசிரியர்களை உள்ளடக்கி 15 பிரிவுகளாக இந்தப் பயிற்சிநெறி நடத்தப்படும்.

இந்தப்பயிற்சி நெறியில் பங்குபற்றவுள்ள ஆசிரியர்களின் விவரங்கள் தற்போது திரட்டப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-5)

# பெரும்போகத்துக்கு விதைநெல் இம்முறை தெற்கிலிருந்து வராது

அரியாலை, செப். 3

இவ்வாண்டு பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்வதற்கான விதை நெல் இம்முறை தென்பகுதியில் இருந்து எடுத்துவரப்படமாட்டாது என்று யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் த. சிவலோகநாதன் தெரிவித்தார்.

பெரும்போக நெற்செய்கைக்கான விதைப்பு காலம் நெருங்கிக்கொண்டு இருப்பதாலும்—

விதைநெல்லைத் தருவிப்பதற்கு கால அவகாசம் தேவைப்படுவதாலும்—

விதை நெல் தருவிப்பதை இவ்வாண்டு நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

விவசாயிகள் உள்ளூரிலேயே விதைநெல்லைக் கொள்வனவு செய்து இம்முறை விதைப்பு வேலைகளை மேற்கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-17)

## சிங்கப்பூர் ஒய்வூதியம்

நவாலி, செப். 3

யாழ். மாவட்டத்தில் மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஓய்வூதியம் பெறுபவர்களின் ஓகஸ்ட் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவினால் அந்தந்த வங்கிகளுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டன.

உரியவர்கள் தத்தமது வங்கிகளுக்குச் சென்று ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(உ-100)

# வாக்களிப்புக்கு அ.அட்டை அவசியம்

## ஆணையாளர் ஆலோசனை

கொழும்பு, செப். 3

தேர்தல் வாக்களிப்புகளின் போது அடையாள அட்டையைக் கட்டாயமாகச் சமர்பிக்க வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட வேண்டும்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

உள்ளூராட்சி சீர்திருத்த ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி எச்.ஏ.பி அபயவர்த்தன தலைமையில் ஆணைக்குழு அண்மையில் கூடிய போது அங்கு அவர் சாட்சியம் அளித்தார்.

வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும் வேட்பாளர்களும் அடையாள அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்—இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-3)

## ஆத்மஜோதி நினைவு விழா

யாழ்ப்பாணம், செப். 3

இந்து சமயப் பேரவையின் முன்னாள் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா ஞாபகார்த்தமாக இந்துசமயப் பேரவையினரால் நடத்தப்படும் விழா எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவில் ஞாபகார்த்த உரையை ஆத்மஜோதி ஞாபகார்த்த நினைவுப் பேருரையை பேராசிரியர் கெ. சிவஞானசுந்தரம் நிகழ்த்துவார்.

(உ-7)

## மாகோ கப்பல் மூலம்

# 2 புதிய றோலர்களும் 3,000 தார் பரல்களும் வரும்

யாழ்ப்பாணம், செப். 3

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் வீதி திருத்தும் வேலைகளுக்கென இரு புதிய றோலர்களும், 3 ஆயிரம் தார் பரல்களும் இந்த மாத நடுப்பகுதியில் காங்கேசன்துறை வந்து சேரும்மாகோகப்பலில் எடுத்துவரப்படவுள்ளன.

தற்போது கொழும்புத் துறை முகத்தில் தரித்து நிற்கும் மாகோ கப்பலில் தார் பரல்களை ஏற்றும் பணி விரைவில் ஆரம்பமாகுமெனவும்—

றோலர்கள் வந்து சேர்ந்ததும் வீதிகள் திருத்தும் பணியை துரிதப்படுத்தக் கூடியதாக இருக்குமெனவும்— வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியச் செய்திகள்

### இந்திய எம். பிக்களின் படிப்பறிவு

புதுடில்லி, செப். 3

இந்திய நாடாளுமன்றத்தில் உள்ள 545 எம். பிக்களில் 16 பேருக்கு பள்ளியில் படித்ததற்கான சான்றிதழ் ஏதுமில்லை!

ஆறாம் வகுப்பு வரை மட்டுமே படித்த ஒருவர் மத்திய அமைச்சராகி உள்ளார்.

எந்த விதக் கல்வித் தகுதியும் இல்லாத ஒருவர் ஒரு மாநிலத்தின் முதல்வராகப் பதவி வகித்து வருகின்றார்.

பல்வேறு சட்ட மன்றங்களைச் சேர்ந்த 4072 எம். எல். ஏக்களில் 122 பேர் கல்வியறிவே அற்றவர்கள்

இந்தியத்தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

### புதுடில்லியில் குண்டு வெடிப்பு

புதுடில்லி, செப். 3

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் மக்கள் செறிந்து வாழும் வர்த்தக மையமான சுர்சமான் பகுதியில் ஆடம்பர ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் நேற்று முன்தினம் குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார். 17 பேர் காயமடைந்தனர்.

தலைநகர் புதுடில்லியில் இந்த ஆண்டில் வெடித்த நான்காவது குண்டு இது.

வடிகால் ஒன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். [உ-ரி]

### ராஜீவ் கொலை வழக்கில் மேன் முறையீடு

புதுடில்லி, செப். 3

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தமக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனைத் தீர்ப்பை எதிர்த்து வழக்கின் 26 எதிரிகளும் தாங்கள் செய்துள்ள மேன்முறையீட்டு மனுமீதான விசாரணைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகும்.

புதுடில்லியில் இந்திய உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு கடந்த வாரம் எடுக்கப்பட்ட போது விசாரணைக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டது.

### தமிழகத்தில் நில நடுக்கம்

தருமபுரி, செப். 3

தமிழகத்தின் தருமபுரி நகரிலும் நல்லம்பள்ளி, மொரப்பூர், அரூர், காரிமங்கலம், பாலக்கோடு, பெண்ணாகரம், அதியமான் கோட்டை உட்பட பலபகுதிகளிலும் கடந்த 25 ஆம் திகதி மாலை 6 30 மணியளவில லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. சில நொடிகள் நீடித்த இந்த அதிர்வால் வீடுகள். கட்டடங்களில் இருந்து பொதுமக்கள் அச்சமுற்று வெளியேறினர். பெரும் பாதிப்போ சேதங்களோ ஏற்படவில்லை.

அதேநேரம் அன்று மாலை சேலம் மாவட்டத்தில் 3 5 ரிச்டர் அளவில் சில செக்கன்களுக்கு நில அதிர்வு நீடித்தது பதிவு செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நில அதிர்வால் கன்னங்குறிச்சிப பகுதியிலும் ஏற்காடு அடிவாரத்திலும் மரங்கள் குலுங்கின. இதனால் மரங்களில் இருந்த பறவைகள் கீச்சிட்டுக்கத்தி விநோத ஒலி எழுப்பியபடி பறந்து சென்றன. (உ)

# ஆப்கான் எல்லைப் புறத்தில் ஈரான் இராணுவ ஒத்திகை

## இருநாடுகளுக்குமிடையே பதற்ற சூழ்நிலை

தெஹ்ரான், செப். 3

ஆப்கானிஸ்தானின் எல்லைப்புறத்தில் உள்ள தனது வடகிழக்கு மாகாணமான கொர்ஸானின் டோர்பட் ஜாம் நகரில் சுமார் 230 சதுர மைல் பரப்பில் — 70 ஆயிரம் துருப்புகளுடன் — பெருத்த எடுப்பில் — ஈரான் நேற்று முன்தினம் ஆரம்பித்த இராணுவ ஒத்திகையினால் இரு நாடுகளுக்கும் இடையில் பெரும் இராணுவ நெருக்கடி நிலை தோன்றியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

ஈரான் அரசுக்கும், ஆப்கானின் ஆளும் தலிபான் அமைப்புக்கும் இடையிலான உறவு மோசமான கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில், இந்த இராணுவ ஒத்திகையை ஈரான் திடீரென ஆரம்பித்திருப்பது நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

சுமார் 160 டாங்கிகள், அறுபது பீரங்கிகள், எண்ணிக்கை குறிக்கப்படாத வியானங்கள், ஹெலிக்கொப்டர்கள் போன்றவை இந்த ஒத்திகையில் பங்குபற்றுகின்றன. இடைத்தூர ஏவுகணையான 'சாம் – 6' உட்பட பல ஏவுகணைகள் பயன்படுத்தப்படுவதாக ஈரான் இராணுவ அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர்.

ஈரானியக் கொடியுடன் பெருந்தொடராகச் செல்லும் டாங்கிகள், கவசவாகனங்களுக்கு மேலாக ஹெலிக்கொப்டர்களும் சரக்கு விமானங்களும் ஆப்கன் எல்லைப் புறத்தை நோக்கி பறந்து செல்வதை ஈரானிய தொலைக்காட்சி ஒலிபரப்பியது.

எல்லைப் புறத்தில் பதற்றத்தைத் தூண்டி வருவதாகக் குறிப்பிட்டு ஈரானைக் கடந்த வாரம் ஆப்கான் எச்சரித்திருந்தது தெரிந்ததே.

தற்போதைய இராணுவ ஒத்திகை மிரட்டல் பாணியில் இருப்பதாக ஆப்கான் குறை கூறியுள்ளது.

ஆப்கானில் புரட்சி மூலம் பதவிக்கு வந்துள்ள தலிபான் அரசை, ஆப்கானின் சட்டபூர்வ அரசாக ஏற்று அங்கீகரிக்க ஈரான் மறுத்து வருவதும்—

தலிபானால் பதவி கவிழ்க்கப்பட்ட புர்ஹனுடின்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## உலகின் சனத்தொகை 600 கோடியைத் தாண்டியது

மணிலா, செப். 3

உலகின் சனத்தொகை அறுநூறு கோடியைக்கடந்து விட்டதாகநேற்று முன்தினம் ஐ.நா. வெளியிட்ட மக்கள் தொகை அறிக்கை தெரிவிக்கின்றது.

இவர்களில் 105 கோடி மக்கள் 15 முதல் 24 வயதுக்கு உட்பட்ட இளம் வயதினராவர். வளர்ச்சியடைந்தநாடுகளில் 118 கோடி மக்களும், வளரும் நாடுகளில் 474 கோடி மக்களும் வசிக்கின்றனர்.

1960 இல் 300 கோடியாக இருந்த சனத்தொகை 1987 இல் ஐந்நூறு கோடியானது. அடுத்த பத்து ஆண்டுகளில் அது மேலும் நூறு கோடி அதிகரித்துள்ளது (உ-6)

# ரஷ்ய அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாண கிளின்ரன் முயற்சி

## கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் சந்திப்பு

மொஸ்கோவில இரண்டாவது நாளாக ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ்யெல்டஸினுடன் உச்சப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் ரஷ்ய கம்யூனிஸ்ட தலைவர்களையும் சந்தித்து பேச்சு நடத்தி உள்ளார்.

யெல்டஸினுடன் முதலாவது உச்சிப் பேச்சை நடத்திய பின்னர் கம்யூனிஸ்ட் தலைவர்களை கிளின்ரன் சந்தித்தார்.

தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளில இருந்து யெல்டஸின் விடுபடுவதற்கு கம்யூனிஸ்ட்டுககளின் ஒத்துழைபபு அவசியம தேவைப்படுகிறது.

ரஷ்ய நாடாளுமன்றததின் கீழ் சபையான ''டுமா''வில பெரும்பான்மை பலம் கொண்டுள்ள கம்யூனிஸ்ட்டுகள் யெல்டஸினின பொருளாதார சீர்திருத்த யோசனைகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர்.

அதே சமயம் கிளின்ரனும் யெல்டஸினும் நேற்று மொஸ்கோவில பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டனர்.

தற்பொழுது நிலவும் பொருளாதார நெருக்கடிகளில் கிருந்து ரஷ்யா மீள வேண்டுமானால் பொருளாதாரச் சீர்திருத்தங்களை ரஷ்யா அமுல் செய்ய வேண்டும் என்று கிளின்ரன் இந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ரஷ்யா அரசியல், பொருளாதார நெருக்கடிகளை எதிர் நோக்கி உள்ள சமயம் கிளின்ரன் மேற் கொண்ட விஜயம் உச்சி மாநாட்டு பெறுபேறுகளில் நிச்சயமற்ற ஒரு நிலையை உருவாக்கி வருவதாக அவதானிகள் தெரிவித்தனர். (இ)

# பங்களாதேஷில் வெள்ள நிலைமை மிகவும் மோசம்

டாககா, செப். 3

பங்களாதேஷில் மழையினால் ஏற்பட்டுள்ள பெரு வெள்ளத்தால் அங்கு நிலைமை மிக மோசமான கட்டத்தை அடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.



பங்களாதேஷ் தலைநகர் [illegible] மிர்ப்பூரில் பெருக்கெடுத்து [illegible] தங்களது வளர்ப்புக் குரங்குகளைச் சுமந்தபடி நடந்து செல்லும் இளைஞன்.

வெள்ளத்தினால் உணவு, உடைமைகள், உறைவிடம் இழந்து பரிதவிக்கும் மூன்று கோடி மக்களுக்குத் தேவையான உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அவசரமாக வழங்கி உதவுமாறு அனைத்துலக நாடுகளிடமும் பகிரங்க உதவி கோரியிருக்கின்றார் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனா.

வெள்ள நிலைமை ஆபத்தான கட்டத்தை அடைந்திருக்கின்றது. நாட்டின் நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

கடந்த ஏழு வாரங்களாகத் தொடரும் மழை வெள்ளத்தினால் இது வரை ஐந்நூற்றி ஐம்பதுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையில்—

இந்த நெருக்கடியான சூழ்நிலையை அரசாங்கம் கையாண்டுள்ள விதம் கடும் கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது.

உதவி வழங்கும்நாடுகள் தமது உதவிகளை வழங்குவதில் தாமதம் காட்டுவதாகத் தெரிவிக்கபபடுகிறது.

இயற்கையின் சீற்றத்துக்கு பங்களாதேஷ் அடிக்கடி இலக்காகி வருவது குறிப்பிடத் தக்கது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியச் செய்திகள்

### ஆகாஷ் ஏவுகணை ஏவப்பட்டது

புதுடில்லி, செப். 3

இந்தியாவின் மிக நவீன— தரையில் இருந்து விண்ணுக்குப் பாயும் — நடுத்தர தொலைவு ஏவுகணையான 'ஆகாஷ்' நேற்று முன்தினம் இரவு8-13மணியளவில்ஒரிஸாவின் சந்திப்பூர் ஏவுகணைத் தளத்திலிருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டு பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

இருபத்தியைந்து கிலோ மீற்றர் சென்று தாக்கும் திறன் கொண்ட இந்த ஏவுகணை 55 கிலோ பொருள்களை எடுத்துச்செல்லக் கூடியது. [உ-5]

### ரயில் விபத்தில் ராஜஸ்தானில் 27 பேர் பலி!

புதுடில்லி, செப். 3

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் ரயில் விபத்து ஒன்றில் 27 பேர் உயிரிழந்தனர். 22 பேர் காயம் அடைந்தனர்.

வேகமாக வந்த கனரக வாகனம் ரயில் மீது மோதியதால் இந்த விபத்து நிகழ்ந்தது.

பத்தொன்பதுபேர் விபத்து நடந்த இடத்திலேயே உயிரிழந்தனர். 8 பேர் ஆஸ்பத்திரியில் மரணமடைந்தனர். காயமடைந்தவர்களின்நிலை அபாயகரமானதாக உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-ரி)

### ஆண்மை இழப்புக்கு நஷ்டஈடு

சென்னை, செப். 3

சிறுநீர் கழிப்பதில் ஏற்பட்ட தொல்லைக்காக சிகிச்சை பெறச் சென்ற சி. சிவகுமார் (வயது 23) என்ற இளைஞருக்கு1993இல் தவறான அறுவைச் சிகிச்சை செய்து அவருக்கு ஆண்மை இழப்பை ஏற்படுத்தினார் என்ற குற்றத்திற்காக சென்னை ராதபுரத்தில் உள்ள ஜோன் ஆர்தர் என்ற டாக்டருக்கு 8 லட்சம் (இந்திய) ரூபாவை 15 சதவீத வட்டியுடன் இழப்பீடாக வழங்கும்படி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் ஆணைக்குழு ஒன்று இத்தீர்ப்பை கடந்த வாரம் வழங்கியது. (உ)

### தங்க விலை திடீர் வீழ்ச்சி

புதுடில்லி, செப். 3

ஆறுமாத காலத்தின் பின்னர் கடந்தவாரம் இந்தியாவில் தங்கம், வெள்ளி ஆகியவற்றின் விலை கணிசமான அளவு திடீரென வீழ்ச்சியடைந்தது. மும்பாயில் ஒரு பவுண் தங்கத்தின் விலை 3.840 ரூபாவிலிருந்து 3,745 ரூபாவாக-- 95 ரூபாவுக்கு -வீழ்ச்சியுற்றது. வெள்ளியின் விலை கிலோவுக்கு 185 ரூபாவாக சரிந்தது.

அவுஸ்திரேலியா பெருமளவு தங்கத்தை தனது சேமிப்பிலிருந்து வெளிச்சந்தைக்கு விற்பனைக்கு விட்டதும், ரஷ்யாவும் அதே போல் நடந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டதும் இந்த விலை வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

இங்கிலாந்து, சுவிற்சர்லாந்துஹொங்கொங்போன்ற நாடுகளிலும் தங்க விலை சரிவடைந்தது. (உ)




# தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் ஏராளமாக பரிசு பெறும் வாய்ப்புகள்

சாதாரண சேமிப்புக் கணக்கு, காந்தா ரண்கினும், (மகளிர் பொற்கணக்கு) ரண்கொவி தன்பத்து கணக்கு, ரணவிறு ரண் கினும் மற்றும் ரண் கதெல்ல குடும்பக் கணக்கு மூலம் நீங்களும் இதில் கலந்து கொள்ளலாம்.

## ரண்கினும் வாசனா

**(பொற்கணக்கு அதிர்ஷ்டம்)**

## தேசிய ரீதி மாபெரும் சீட்டிழுப்பு

நீங்கள் செய்யவேண்டியது இதுவே.

*1999 ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்குட்பட்ட காலப்பகுதியில் மேலே குறிப்பிட்ட கணக்குகளில் 10,000 ரூபா அல்லது ரண் கதெல்ல தொகுதியில் 12,000 ரூபா வரை கூட்டாக ஆகக்குறைந்த கணக்கு மீதியாக வைத்திருப்பது மட்டுமே நீங்கள் செய்யவேண்டியது.*

**முதலாம் பரிசு**

*25 இலட்சம் பெறுமதியான வீடொன்று.*

**இரண்டாம் பரிசு**

*ஒவ்வொன்றும் 12 இலட்சம் பெறுமதியான 2 சொகுசுக் கார்கள்*

**மூன்றாம் பரிசு**

*ஒவ்வொன்றும் 5இலட்சம்ரூபா பெறுமதியான3மோட்டார்கார்கள்*

**ஆறுதல் பரிசுகள்**

*20 வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்*
*20 குளிர்சாதனப் பெட்டிகள்,*
*20 சலவை இயந்திரங்கள் (வோஷிங்மெஷின்கள்)*

## மாகாணச் சீட்டிழுப்பு

**(10 மாகாணங்களுக்காக)**

*இதில் கலந்துகொள்ள 1998 ஒக்ரோபர் 01 ஆந் திகதி முதல் டிசெம்பர் 31 ஆந் திகதி வரை பின்வரும் முறையில் உங்கள் சேமிப்புக் கணக்குகளில் கணக்கு மீதி இருக்கவேண்டும்.*

பிரிவு I

*ரூபா 5,000 அல்லது அதற்குக் கூடிய தொகையை மீதியாக வைத்திருக்கும் மேலேயுள்ள சேமிப்புக்கணக்கு வைத்திருப்போருக்கு அல்லது ரூபா 6,000 இற்கு அதிக தொகையை கூட்டு மீதியாக வைத்திருக்கும் ரண்கதெல்ல (பொன் மனை) குடும்ப அங்கத்தவருக்கானது*

**முதலாம் பரிசு**

*10 மோட்டார் கார்கள்*

**இரண்டாம் பரிசு**

*20 இரண்டு சக்கர கை உழவு இயந்திரம் அல்லது*
*20 மூன்று சக்கர ஓட்டோ வண்டிகள்*

**மூன்றாம் பரிசு**

*40 வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்*

**ஆறுதல் பரிசுகள்**

*100 தையல் இயந்திரங்கள், 100 சைக்கிள்கள்,*
*100 காஸ் அடுப்புகள்*

## 1,000 ரூபா பணத்தை முதலீடு செய்துள்ள சிறிய சேமிப்பாளர்களுக்குக்கூட இந்த சீட்டிழுப்பில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றது

பிரிவு II

**1,000 ரூபா முதல் 4999 ரூபா வரையில் மீதி வைத்திருக்கும் கணக்கு வைப்பாளர்களுக்கு மாகாணத்திற்கு 100 வீதம் தேர்ந்தெடுக்கப்படும் 1,000 கணக்கு வைப்பாளர்களுக்கு கணக்கிலுள்ள தொகையைப் போல் இன்னொரு மடங்குத் தொகை இலங்கை வங்கியால் கணக்கில் வரவு வைக்கப்படும். வெற்றி பெற்றால் நீங்கள் சேமித்த தொகை தானாகவே இரு மடங்காகிவிடும்.**

**இலங்கை வங்கியின் ரண் கினும் வாசனா பொற்கணக்கு அதிர்ஷ்டத்தின் பொற்கதவு உங்களுக்காக திறந்துள்ளது. இலங்கை வங்கியில் மேலும் மேலும் சேமியுங்கள்.**

மேலதிக விவரங்களுக்கு

**உங்கள் இலங்கை வங்கி முகாமையாளரைச் சந்தியுங்கள்!**

BANK OF CEYLON இலங்கை வங்கி

# இலங்கை வங்கி

**(தேசத்தின் வங்கியாளர்)**

(4686)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி


" தேவியின் அருளால் தேசம் சிறக்கும் "

**ஓம் சக்தி நகைத் தொழிலகம்**

(தங்கப் பவுண் வியாபாரத்தில் நாணயம்மிக்கவர்கள்)

93, டாக்டர் சுப்பிரமணியம் சாலை, சுன்னாகம்.

"துர்க்கையைத் துதிப்போர்க்குத் துன்பமேயில்லை"

**செந்தூரன் கோப்பி & கூல்பார்**

( சுத்தம் — சுவை — புதுமை மிக்கவர்கள் )

66, டாக்டர் சுப்பிரமணியம் சாலை, சுன்னாகம்.

" துர்க்கையைத் துதிப்போம் தூய்மையடைவோம் "

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**

( புத்தக வியாபாரத்தில் புதுமை செய்வோர் )

235, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

" துர்க்கா தாயே எம் துயரங்கள் போக்கிடம்மா "

**சிற்றி பெயின்ற் ஹவுஸ்**

( வர்ணமிகு தீந்தைகளின் ஜால மாளிகை )

14, டாக்டர் சுப்பிரமணியம் சாலை, சுன்னாகம்.

" வம்மின்; வடம் பிடிமின்; வாழ்த்துமின் "

சுன்னாகம்

**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

காங்கேசன்துறைச்சாலை, சுன்னாகம்.

"வாழியவள் சித்திரத் தேர்! வாழ்க அவள் புகழ்!!"

**ஐ. பேரம்பலம் அன் சன்**

கோயில் அபிஷேகத் திரவியங்கள், மருந்துச் சரக்கு வகைகளுக்கும் – வைத்திய சேவைக்கும் சிறப்பானவர்கள்

வைத்திய கலாநிதி பேரம்பலம் பத்மநாதன்

10, கே. கே. எஸ். சாலை, சுன்னாகம்.

" தேவி தேரில் வருகிறாள்! தேடியோரைத்தேடி "

**ரவி கிறீம் ஹவுஸ்**

( ஐஸ்கிறீம் உலகில் புகழ் பெற்றவர்கள் )

88, கே.கே. எஸ். வீதி, சுன்னாகம்.

" துர்க்கா சரணம் தாயே சரணம் "

**ஜயதனா ரெலிகொம்**

( உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி தொடர்பாளர்கள் )

உள்நாடு: 070 - 212262

வெளிநாடு: 0094 - 70 - 212262

16, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

" அன்னையின் கடைக்கண்கள் அகிலத்தைக் காக்கும் "

**மகமாஜீ பேனிச்சர் நிலையம்**

(தளபாட உற்பத்தியில் தனித்துவமானவர்கள்)

31, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

" தேரேறும் தேவியவள் திருப்பாதம் போற்றுவோம் "

தினக்கலண்டர், டயறிகள், பாலர்புத்தக வகைகளுக்கு

**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**

கைதடி,

கிளை: 3/20, செட்டியார் தெரு, கொழும்பு.

தொலைபேசி: 334004


## ஆலய மகோற்சவப் பெருவிழா

## கிரியை தரும் உட்கருத்துக்கள்

அகில புவனங்களையும் பரிபாலித்து அருள் செய்யும் பரமபதியாகிய இறைவன் ஆன்மாக்களிடத்தும் அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் என்னும் புருடார்த்தங்களை அனுக்கிரகித்து ஆட்சிபுரியும் தன்மையுடையவர். இறைவனின் வேறுபட்ட தன்மையில்லாத அம்பாள் இரட்சிக்கும் பொருட்டு துர்க்கை என்னும் திருநாமத்துடன் பலநூற்றாண்டு காலத்திற்கு முன் தெல்லி மாநகரின் உளுகுடைப்பதி துர்க்காபுரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி ஆன்ம கோடிகள் உய்யும் பொருட்டு அருளாச்சி செய்து வருகிறாள்.

இச்சந்தர்ப்பத்தில் மகோற்சவத்தின் கருத்தை நாம் அறிவது சாலச் சிறந்ததே.

பசுவாகிய உயிர் ஆணவம், கன்மம், மாயை ஆகிய பாசங்களை அறுத்து, அருட்சக்தியின் துணையோடு, பதியாகிய சிவத்தைச் சார்ந்து பேரின்பம் உய்த்திருப்பதையே கொடிமரம் காட்டுகிறது.

கொடிமரம் — இது சிவத்தின் வடிவாகவே அமைந்திருப்பது. கொடி — இது உயிரைக் குறிக்கும். கொடியில் எழுதப்பட்டு இருக்கும் சின்னம் இறைவனுக்குரிய வாகனமாக இருப்பதோடு பகவான் ஆகிய உயிரையும் குறிக்கும்.

கொடிக்கயிறு- கொடிச்சீலையை கொடிக்கம்பத்தோடு இணைக்கும் மஞ்சள் கயிறு. கொடிக்கயிறு அருள் சக்தியைக் குறிக்கும். சைவ சித்தாந்தத்தில் சக்தியைக் குறிக்கும். இறைவனின் சக்தியாகிய அருளின் துணைகொண்டே உயிர் முக்தியடைய முடியும். கொடி, கொடி மரத்தின் உச்சியை அடைவதற்கு இக்கொடிக் கயிறு உதவுவதால் இதனை இறைவனின் அருட்சக்தியாக எண்ணவேண்டும். தர்ப்பைக்கயிறு—இதுபாசத்தை குறிக்கும். தர்ப்பைக் கயிற்றோடு பிணைக்கப்பெற்ற கொடி தர்ப்பையின் உதவியால் மேலே ஏறும். கொடி, கொடிமரத்தின் உச்சியில் தங்கிவிடத் தர்ப்பைக் கயிறு மட்டும் கீழ் இறங்கும். பதி, பசுவைப் போல்பாசமும் அநாதி என்பது இதன் உட்பொருள்.

கோயிற்பெருவிழாவில் கொடியேற்றம் முக்கிய இடம்பெறுகின்றது. குருவானவர், பெருவிழா நடைபெறுவதை தேவர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு முரசு கொட்டச் செய்வார். பின்பு கொடிப்பட பூசை நடக்கும். அதன்பின் மூலவரை உற்சவமூர்த்தியில் எழுந்தருளச் செய்து கொடிக்கம்பத்தை அடைகிறார். கொடிமரத்தில் இந்திரன் முதலான தேவர்களை ஆவராகனம்செய்து வேதம், கீதம், பண் முதலியன சமர்ப்பிக்கும் வேளையில் மங்கள வாத்தியங்கள் முழங்கக் கொடியை ஏற்றுவர்.

தொடர்ந்து தம்பபூசை, பலிதானம், அஸ்ரதேவர் ஆவராகனம், ஆசீர்வாதம் ஆகிய பூசைகள் நடைபெற்றுகொடியேற்றம் நிறைவுறும்.

கொடியேற்றம் இறைவனின் படைத்தல் தொழிலைக் குறிக்கின்றது. மாலைநேரப் பூசைக்குப் பின் உள் வீதி உலா வருதல் காத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும் குறிக்கும். இறைவனுக்கு அபிஷேகம் செய்வது சுண்ணம் (அரப்பு)இடித்து, எண்ணெய் முழுக்காட்டுவது மறைத்தல் தொழிலையும், பெருவிழா முடிவில் நீராடல், கொடி இறக்கம் ஆகியன இறைவனின் அருளல் தொழிலையும் குறிக்கும்.

கொடியிறக்கத்தின் பின் மௌன உற்சவம் நடைபெறும். இது உயிர் சிவத்துள் ஒடுங்கி பேரின்பம் அடைவதைக் குறிக்கும். கொடியேற்றம்

*கிரியாமணி*

**சிவஸ்ரீ**

**இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்**

*பிரதம சிவாச்சாரியார்*

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

கோயில் பெருவிழா தொடங்குதலையும் கொடியிறக்கம் பெருவிழா நிறைவுறுவதையும் குறிக்கும்.

ஆகவே இந்த மகோற்சவகாலங்களில் நடைபெறும் பூசைவிழாக்களில் மனம், மொழி, மெய் ஒன்றி வழிபாடாற்றி திருவருள் பெறுவோமாக.


அம்பாளின் பெருமைகளை உலகெங்கும் பறைசாற்ற மலர்க்குழுவினருக்கும் ஆதரவு நல்கிய அம்பாள் அடியார்களுக்கும் அம்பாளின் கருணைக் கடாட்சம் கிடைக்கப்பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகின்றேன்.

வணக்கம்

''லோக சமஸதா சுகினோ
பவந்ாது சுபமஸ்து''

## தேர்த் திருவிழா நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| காலை | 5-00 மணி | பூசை |
| ,, | 5-20 மணி | ஸ்நபன அபிஷேகம் |
| ,, | 6-00 மணி | பூசை |
| ,, | 6-30 மணி | கொடித்தம்பப் பூசை |
| ,, | 7-15 மணி | வசந்த மண்டபப் பூசையும் அம்பாள் வீதியுலாவும் |
| ,, | 9-00 மணி | அம்பாள் தேரில் ஆரோகணித்தல் |
| ,, | 10-30 மணி | தேர் இருப்படைதலும், அருச்சனையும் |
| பிற்பகல் | 12-30 மணி | அம்பாள் தேரிலிருந்து அவரோகணித்து பச்சை சாத்தி நவசக்தி அருச்சனை |
| ,, | 2-00 மணி | அம்பாள் எழுந்தருளி வசந்தமண்டபமடைதலும், பிராயச்சித்த அபிஷேகமும் |
| ,, | 2-30 மணி | பூசை |
| ,, | 3-00 மணி | ஸ்தம்ப பூசை |
| ,, | 4-00 மணி | வசந்த மண்டபப் பூசையும், அம்பாள் எழுந்தருளி பூந்தண்டிகையில் திருவீதியுலா வருதல் |
| ,, | 6-00 மணி | அர்த்தசாமப் பூசை |



துர்க்கா சரணம் சர
துர்க்கா சரணம் சர
தேவி சரணம் சர
தேவி சரணம் சர
அம்மா சரணம் சர
அம்மா சரணம் சர
ஆத்தாள் சரணம் சர
ஆத்தாள் சரணம் சர

## அன்னையே ஆண்ட

ஊரோடி மீண்ட நாம் உடை
உரிமையும் ஓடவிட்
சீரோடு வாழ்ந்தின்று சிதறுண்
செய்வதொன்றும் அ
ஆரோடு நோவதினி ஆருக்குறை
அன்னையே ஆண்ட
தேரோடி வீதிவருந் தெல்லிநகா
சேர்ந்துன்னை வேண்

## தேரேறி நீ வருவாய் து

பாராளும் அன்னையே
பார்வதியே துர்க்கை
சாரார் குழலழகி
கண்ணழகி கருணை
சீரார் அருளழகி
சேவடி அருள்பவளே
தேரேறி நீ வருவாய்
தெல்லியூர் துர்க்கா

*கனக. புவே*

## தேர் விழாச் சி

ஊரெல்லாம் கோயில்; உணர்வெ
நீரெல்லாம் தீர்த்தம்; நிழலெல்
ஊரில் விழாக்கள் உயர்தெய்வ
சீர்விழவே அந்த திருவிழா த
தேர்விழா என்றால் சிறப்பாம்;
நேரிலே கண்டு நிறையின்பம்

*வாகீச கலாநித்*

## துன்பம் பறந்

துர்க்கை அம்மனைத் தொழு
துன்பம் பறந்தோடும் அவ
துணையும் அருளும் துணிவ
தொல்லைகள் ஒழிந்தோடே


தேரேறும் தேவியின் அருள் எமது வாடிக்கையாளர்களுக்கு கிடைப்பதாக!

இன்று வடம் பிடிக்க வாருங்கள்; வந்தால் மேல்வீட்டில் இடம்பிடித்தல் எளிது

**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்**

(புகழ்பெற்ற புத்தக வியாபாரிகளும் புதினப்பத்திரிகைகளின் பிரதம முகவர்களும்)

பஸ் நிலையம் முன்பாக சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்த்திருவிழா சிறப்பிதழ்





ம் சரணம் தாயே
ம் சரணம்
ம் சரணம் தாயே
ம் சரணம்
ம் சரணம் தாயே
ம் சரணம்
ம் சரணம் தாயே
ம் சரணம்.

## ஆண்டருள்வாய்

உடைமையும் உள்ளமும்
ஓடவிட்டோம்
சிதறுண்டு நிற்கிறோம்
ன்றும் அறிகிலோம்
ஆருக்குரைப்பதோ
ஆண்டருள்வாய்
தல்லிநகர்த் துர்க்கையே
ன வேண்டுகின்றோம்,

-சிற்பி.

## வாய் துர்க்காதேவி

னயே
துர்க்கையே
கருணைமிகு
ன்பவளே
வாய்
துர்க்காதேவி;

. புவனேந்திரநாதன்.

## ாச் சிறப்பு

உணர்வெலாம் தெய்வபக்தி
திழலெல்லாம் மண்டபங்கள்
ர்தெய்வம் போற்றுகின்ற
விழா தம்முள்ளே
றப்பாம்; பொதுமக்கள்
இன்பம் கொள்விழா.

கலாநிதி கி. வா. ஜ.

## றந்தோடும்

தொழுதால் என்றும்
அவள்
துணிவாய் இருந்தால்
ந்தோடும்.

## அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்



இன்றுதெல்லி நகர்த்துர்க்கை தேரேறிவருகிறாள் அடியார்கள் உளங்களிக்க, உடல்களிக்க உயிர் களிக்கப் பவனிவரும் அன்னையின் அருட்காட்சியைக் கண்டு ஆனந்த மடைவோமாக! ''என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே'' என்று இறும்பூதடைவோமாக எங்கள் உன்னத தேரிலும் அன்னையை ஏற்றி வைத்து பக்தி மலர் தூவிப் பரவிப் பணிவோமாக.

தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்:
ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்-

# அருட்கருணை அள்ளி வழங்க தேரேறி வருகிறாள் துர்க்கை

தெல்லிப்பழை என்ற கிராமம் இன்று ஈழத்தில் மட்டுமல்ல தமிழர் வாழும் நாடெங்கும் பிரபல்யம் பெற்றுவிட்டமைக்கு துர்க்காதேவியின் அருளாட்சியுடனான ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானமே காரணமாகும். இன்று துர்க்காபுரம் முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளது. மங்கள தோரணங்களும், வாழை மரங்களும், பக்தர்களின் மலர்ந்த வதனங்களும், பட்டுச் சேலைகளின் சர சர என்ற ஒலியும், சிறுவர்களின் மகிழ்ச்சி ஆரவாரங்கள் மத்தியில் தேவியின் பக்தர்களின் அரோகரா கோஷமும் பார்ப்போரைப் பரவசப் படுத்தும். ஆம், இன்று உலக மகாசக்தியான துர்க்காதேவி தன் பக்தர்களின் மனங் குளிர தேரில் வலம் வரும் உன்னதத் திருநாளாகும்.

தொன்றுதொட்டு செந்தமிழும், சைவமும், பண்பாடும் சிறப்புற்றுள்ள தெல்லிப்பழை திருப்பதியிலே தேவியவள் தேரின் வடம் பிடிக்க முண்டியடிக்கும் பக்தர் கூட்டத்தைக் காண இந்த இருகண்களும் போதாது என்று ஆனந்தக் கண்ணீர் மல்க பாடிய கவிஞனின் வரிகள் மீண்டும் ஞாபகத்துக்கு வருகின்றன.

ஈழத் திருநாட்டிலே முகபத்திர வேலைப்பாடுகளுடன் எண்கோண வடிவிலமைந்த திராவிட மரபுத் தேராக முதன் முதல் அமையப்பெற்றது தெல்லியூர் துர்க்காதேவியின் தேர் என்பது சிறப்பான அம்சமாகும். புதுமோடியான இத்தேர் வேற்றுமையான சிறப்புக்கள் விதி விலகாது அமையின் ஆக்கத்தின் சிறப்பெய்தும் உபபீடம் தொடக்கம் அதிர்ஷ்டானம் ஆனைத்தொட்டிப்பார், கொடிஞ்சி, பிரஸ்தானம், விமானம் ஈறாக் கலசம் வரை முகபத்திர மடக்கைகள் மீட்கப்பெற்றுள்ளமையினால் சிறந்த வயச் சிறப்பு அமைந்துள்ளது.

அரோகரா கோஷம் வானைப் பிளக்க பக்தர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அசையும் போது தேரில் உள்ள நூற்றியெட்டு மணிகளும் சேர்ந்து ஒலிக்கும் மணியோசை பக்தர்களின் பஜனையுடன் சேர்ந்து பொலிவூட்டும். பிலிப்பீன்ஸ் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட முந்நூறு அடி நீளமான தேர் வடத்தின் ஒரு பக்கத்தில் பெண்களும், மறு பக்கத்தில் ஆண்களுமாக இழுக்கும் ஆரவாரம் வேறெந்த கோவில் தேர்த் திருவிழாவிலும் காண முடியாத சிறப்பம்சமாகும்.

தேவியின் கிழக்கு நோக்கிய வாசலில் தேர் வந்து நின்றதும் படப்பிடிப்பாளர்களின் கமராக்கள் எல்லாம் ஒளி பாய்ச்சி, அந்த அரிய காட்சியைத் தமது கமராவுக்குள் அடக்கிக் கொள்ளும். முப்பத்தொரு அடி நீளமும், இருபத்தொரு அடி அகலமும், அறுபத்து மூன்றடி உயரமும் கொண்ட அழகிய கோபுரமும் தேவியின் தேரும் சேர்ந்தாற் போல தோன்றும் இந்த அழகுமிக்க காட்சியைக் கண்டு உள்ளம் குளிரும்.

சைவ மக்கள் விரதமிருந்து தேவியை வழிபட்டு சங்கற்பம்செய்து தீர்த்தமாடும் போது அவர் தம் பாவங்கள் எல்லாம் ஒழிந்து புண்ணிய ஆன்மாவாக இடம் பெறுகின்ற ஒரு நிலையை அடைவதான நம்பிக்கை வளர்ந்து வருவதை இத் தீர்த்த உற்சவ காலத்தின் போது காணக் கூடியதாக உள்ளது.

சைவ ஆலயங்களுள் சமயப் பணியுடன் சமூகப் பணியையும் சிறப்பாக ஆற்றி வரும் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பரிபாலன சபையினர் ஏனைய ஆலய பரிபாலன சபையினருக்கு முன்னுதாரண கர்த்தாவாக விளங்குகின்றனர். ஆலயத்தின் துரித வளர்ச்சிக்கும், புகழுக்கும் பரிபாலன சபையை நல்வழியில் இட்டுச் செல்லும் தலைவி ''துர்க்கா துரந்தரி'' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தன்னலங் கருதாத சிறப்பான சேவையே என்பதைக்குறிப்பிடாது இக்கட்டுரையை நிறைவு செய்ய முடியாது. ''சிவத் தமிழ்ச் செல்வி'' அவர்களின் ஆழ்ந்த பக்தியும், உயர்ந்த தியாக சிந்தையும், பரந்த நூலறிவும், கவர்ச்சி மிக்க சொல்லாற்றலும், சிறந்த நிர்வாகத் திறனும் இணையில்லா தலைமைத்துவ ஆற்றலும், நிர்க்கதியற்று அகதியாய்க் கண்ணீர் சிந்தும் மக்களின் துயர்துடைக்கும் என உறுதியாக நம்புவோம். துட்டரை வெற்றி கொள்ள ஸ்ரீ துர்க்கை அவள் மனித உரு எடுத்து மக்கள் துயர் துடைப்பாள் என்று இந்த நன்னாளில் நம்புவோமாக.

★

**சபா. புஷ்பநாதன்**

மலர் ஆக்கம்:
**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்**
சுன்னாகம்.


''அன்னையின் எழிலில் அகிலம் மகிழ்கிறது''
**புதிய சோதி நகைத் தொழிலகம்**
(தங்கப்பவுண் வியாபாரத்தில் முதன்மையானவர்கள்)
64, டாக்டர் சுப்பிரமணியம் சாலை, சுன்னாகம்.

''தேவியவள் கடைக் கண்கள் வல்லன; எல்லாம்தரும்''
**சண்யோ கோப்பி & கூல் பார்**
[ சிற்றுண்டிப் பிரியர்களின் சொர்க்கம் ]
இல. 16. பஸ் நிலையம் முன்பாக,
சுன்னாகம்.

''தூயவளே துர்க்கையம்மா துயர்துடைத்தருள்வாயே''
**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**
( மாணவர் மனங்கவர்ந்த புத்தக நிறுவனம் )
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

''தேவியைப் போற்றுவோம் தேறுதலடைவோம்''
**புகழ் பல்பொருள் களஞ்சியம்**
(பலசரக்கு வியாபாரத்தில் புகழ் பெற்றவர்)
இல. 3, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

''தெல்லியூர் தாயே தேரேறி எம்மைக் காப்பீர்கள்''
**தெல்லிப்பழை பல நோ. கூ. சங்கம்**
துர்க்காபுரம், — தெல்லிப்பழை.

''தேரேறும் தேவியே சரணம் தாயே''
**ராஜா மெடிக்கல்ஸ்**
( மருந்துச் சரக்கு வியாபாரத்தில்
முதன்மையானவர்கள் )
பிரதான வீதி. — சுன்னாகம்.

'துர்க்கையே எம் துயர்துடைக்க தேரேறி வாரும்மம்மா!
அருந்துங்கள்:
**அண்ணா கோப்பி**
அண்ணா தொழிலகம்
இல. 4, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
இணுவில்.

'தேவி தேரேற தேசமெங்கும் மகிழ்வேறும்'
**மங்கை சில்க்**
[மங்கையர் மனங்கவர்ந்த ஜவுளி மாளிகை]
இல. 8, நவீன சந்தை, இல. 15, நவீனசந்தை,
சுன்னாகம். யாழ்ப்பாணம்.

'தேம்பியழும் எம்மினத்தைத் தேற்றி வழி காட்டும் தாயே'
**ஸ்ரீமுருகன் நகை மாடம்**
[ நவீன நகைகளுக்கு நம்பிக்கையானவர்கள் ]
25, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்

'சக்தியைப் போற்றுவோம் சகல பிணியுமகலும்'
**நாகம்ஸ் சினிமா & நாகம்ஸ் பாட்டா**
[அங்கீகாரம்பெற்ற பாட்டா விற்பனையாளர்கள்
நவீனசந்தை, சுன்னாகம்.

ாக!
து
ளும்)

''தேரேறும் தேவியே தேசத்தைக் காத்தருளும''
✠ தமிழ் - ஆங்கில நூலகசேவை
✠ தமிழ் - ஆங்கில தட்டச்சு
✠ றோணியோ ✠ மொழிபெயர்ப்பு
✠ கடிதம் தயாரிப்பு சேவைகளுக்கு
**நீதினி**
டாக்டர் சுப்பிரமணியம் சாலை சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வல்லைப் பாலத்தைத்திருத்தி

# அகலப்படுத்த நடவடிக்கை

## வீதி அதிகாரசபை மேற்கொள்கின்றது

யாழ்ப்பாணம், செப். 3

வடமராட்சிப் பகுதியையும், வலிகாமம் பகுதிகளையும் இணைக்கும் இரண்டு பெரியபாலங்களில் ஒன்றான வல்லைப் பாலம் விஸ்தீரணப் படுத்தும் நடவடிக்கையையும் புனரமைக்கும் நடவடிக்கையையும் வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட இப்பாலம், கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போது ஆங்காங்கே சேதமடைந்ததும் —

அவ்வப்போது சேதமடைந்த பகுதிகள் — தற்காலிகமாக — மரங்கள், கல், மண் என்பன கொண்டு முட்டுக் கொடுத்து பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதும் —

பாலம் மிகவும் அபாயகரமான நிலையிலேயே இருந்து வருவதும் — தெரிந்தவையே.

சுமார் 100 மீற்றர் நீளத்தைக்கொண்ட இப் பாலத்தைத் தகுந்த முறையில் புனரமைப்புச் செய்ய வீதி அபிவிருத்தி அதிகார சபை முன் வந்து அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

புனரமைப்பில் முதற்கட்டமாக இப்பாலம் இருவழி பாதைமுறையில் அமைதற்கான வகையில் விஸ்தீரணப்படுத்தப்படவுள்ளது,

இது வரை காலமும் இப்பாலம் ஒரு நேரத்தில் ஒரு வாகனம் மட்டும் செல்லக் கூடியதாக ஒடுங்கியதாக— அமைந்திருந்தது.

தற்போது ஒரே நேரத்தில் இரண்டுவாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்திச் செல்லக் கூடிய அளவிற்கு அகலப் படுத்தப்படவுள்ளது.

அகலப்படுத்தும் நடவடிக்கைகளை அடுத்து புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சுமார் இரண்டு கோடி இருபது லட்சம் ரூபா செலவில் இவ்வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக, வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-15)


உ

**மறக்க முடியாத அந்த நாளில்..!**

இல்லற வாழ்வில் இணையும் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் மறக்க முடியாத நாள் திருமண நாள்.

அந்தச் சுபநாளின் நிகழ்வுகள் நினைவில் நிலைத்திருப்பவை. அவற்றை பதிவு செய்யப் புகைப்படங்கள், வீடியோக்கள் மட்டும் போதுமா?

**சொகுசுக் காரில் தம்பதிகள் ஊர்வலம் வருவதையும் சேர்த்துக் கொண்டால் மேலும் சிறப்பல்லவா?**

உங்களுக்கு உதவ எங்களின்
"ரொயோற்றா கொறோலா"
*"TOYOTO COROLA"*
காத்திருக்கிறது

தொடர்பு கொள்ளுங்கள்:
இல: 212 / 1, கோவில் வீதி
(கைலாசபிள்ளையார் கோவில் முன்பாக)
நல்லூர்



**புதுக்கடை திறப்பு விழா**

****************

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 18 ஆம் நாள் (3 9 98) இன்று வியாழக்கிழமை காலை 9.46 முதல் 11.23 மணி வரையுள்ள சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கவுள்ள

**சொர்ணமதி நகை அகம்**

எனும் ஸ்தாபனத்தை புதிதாக ஆரம்பிக்க இருப்பதால் அத்தருணம் அனைவரையும் சமூகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சு. மார்க்கண்டு
(பாலன்)

87/8 கண்டி வீதி,
சாவகச்சேரி. (58793)



**மகானந்தவாசா தொலைபேசிச் சேவை**

உள்ளூர், வெளியூர்களுக்கான நேரடித் தொலைபேசிச் சேவை

எமது வாடிக்கையாளரின் நலன் கருதி 1-9-98 இல் இருந்து எமது சகல தொலைபேசிக் கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

கட்டணவிவரங்கள்:

சாதாரண நாள்களில்

| | | |
|---|---|---|
| வெளிநாடு | 1 நிமிடம் | 120 ரூபா |
| வெளியூர் | 1 நிமிடம் | 8 ரூபா |
| இந்தியா | 1 நிமிடம் | 90 ரூபா |

ஞாயிற்றுக்கிழமைகளில்

| | | |
|---|---|---|
| வெளிநாடு | 1 நிமிடம் | 90 ரூபா |
| இந்தியா | 1 நிமிடம் | 80 ரூபா |

வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் அழைப்புகளுக்கு 1 நிமிடம் 8 ரூபா

வெளியூர் தொடர்புகளுக்கு — 070 - 212216
வெளிநாடுத் தொடர்புகளுக்கு — 0094 - 70 - 212216

கொக்குவில் தபாலகம் முன்பாக,
ஆனைக்கோட்டை றோட்,
கொக்குவில். (58849)


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு: 19 — 02 — 1919

உதிர்வு: 13 — 09 — 1997

**அமரர் வைத்திலிங்கம் அரியரட்ணம்**

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

கடமை-கண்ணியம்-கட்டுப்பாட்டிற்கு எடுத்துக் காட்டாகவும் கல்வியூட்டி அன்பாகவும், பண்பாகவும் எமக்கு நல்வழி காட்டிய அன்புத் தந்தையே! எமது கண்ணீர்ப் பூக்களுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளை,
சகோதரர்கள்.

நவாலி தெற்கு. (58871)


**கலாலயா பயிற்சியகம்**

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

**மகளிருக்கான**
**டிப்ளோமா மனைப்பொருளியலும் கைத்திறனும்**
**பயிற்சிகள்**

★ கேக் ஐஸிங்
(பட்டர் ஐஸிங், றோயல் ஐஸிங், பாச்மென்ட் ஐஸிங், புறோஸ்றிங் ஐஸிங், Fondant Icing மற்றும் மாச்சினி அலங்காரம்)

★ உணவு தயாரித்தல்
(கீழைத்தேச, மேலைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள், புடிங்வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், சூப் வகைகள் தயாரித்தல் இத்துடன் உணவை அலங்கரிக்கும் முறை, மரக்கறிகளைக் குடைந்து உருவங்கள் செய்தல், மேசை அலங்காரம், உணவு பரிமாறும் விதம்)

★ உடை தயாரித்தல்
(குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள், கதிரை விரிப்பு, தலையணை உறை தைத்தல், பூப்போடுதல்)

★ பூ வேலை
(ஸ்ரொக்கிநெற், டிப் இன் மலர்கள், Panclay மலர்கள், பேப்பர் றிபன் மலர்கள், துணியினால் மலர்கள், மலர்ச்செண்டுகள் (Bouquete) செய்தல்)

★ கை வேலை
(பேப்பர் அலங்காரம், Soft Toys, வைக்கோல் வேலை, கழிவுத்துணி வேலை, கம்பளி நூல் வேலை)

ஆகிய பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படும். மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் வகுப்புக்கள் நடைபெறும்.

- பயிற்சிக் காலம் 6 மாதம்
- பயிற்சியின் முடிவில் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- இப் பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது.
- கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் காலை 9-00 மணிமுதல் பி. ப. 1-00 மணிவரை நடைபெறும்.
- சனி, ஞாயிறு பயிற்சிகள் காலை 9-00 மணி முதல் பி. ப. 2-30 வரை நடைபெறும்.

சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 06 - 09 - 98
கிழமை நாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 07 - 09 - 98

— இயக்குநர்

(சி/4693)


**எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு: 24 — 07 — 1928

உதிர்வு: 03 — 09 — 1990

**அமரர் E. K. குமரையா**

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன்:

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

99/ 6, சந்தான மாதா
கோயில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (58818)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பந்தைத் தள்ளாதீர்

அணி சேரா அமைப்பைச் சேர்ந்த நாடுகளின் தலைவர்களுக்கு அனுப்பிய கடிதத்தினூடு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தாம்தயார் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் உணர்த்தி இருந்தனர்.

இத்தகைய ஒரு புதிய சூழ்நிலையில், பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளை அரசாங்கம் முனைப்புடன் செய்ய வேண்டும் என்று இப்பத்தியில் எழுதியிருந்தோம். பந்து அரசின் பக்கத்தில் விழுந்துள்ளது என்பதனையும் குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், அரசமைப்பு, நீதி, இன நல்லிணக்க அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் சென்னையில் தெரிவித்த கருத்து, தமது பக்கம் விழுந்துள்ள பந்தை மெதுவாக ஐக்கிய தேசியகட்சிப் பக்கம் தள்ளிவிடும் ஏற்பாடாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்பு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி மறுக்கிறது. அதனால் உலக நாடுகளின் அழுத்தம் ஐக்கிய தேசியக் கட்சி மீதே அவசியம் என்கிறார் அமைச்சர் பீரிஸ்.

அவர் கூறுவதில் ஓரளவு உண்மையுண்டு. ஆயினும் ஐக்கிய தேசியக் கட்சி மீது தான் அழுத்தம் தேவை. அரசாங்கத்தின் மீதல்ல என்ற நிலை ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

அரசாங்கம் அரசியல் தீர்வுப் பொதி ஒன்றைக் கையில் வைத்திருப்பதாகக் காட்டிக் கொள்கின்றது. ஆனால் போரையே முனைப்பாக முன்னெடுத்துச் செல்கிறது. மாகாண சபைத்தேர்தல்களை ஒத்தி வைத்தாலும் பரவாயில்லை; மக்களின் ஜனநாயக உரிமைகளில் அடிப்படையானதான வாக்குரிமையைப் பறித்தாலும் பரவாயில்லை;போரை இடைநிறுத்தக்கூடாது; என்று கருதும் அளவுக்கு அரசின் செயற்பாடு திட்டம் அமைந்துள்ளது.

போர் தொடர்வதால் தமிழ்மக்கள் அனுபவிக்கும் அல்லல்கள், அவலங்கள் சொல்லி மாளாதவை. தமிழர்களின் அரசியல் உரிமைகள் மட்டுமென்ன. அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கான உரிமைகள் பலவும். அடிப்படை உரிமைகள் பலவும் நசுக்கப்பட்டுள்ளன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் வெளியார் அழுத்தம் இன்றியே செயற்படக்கூடிய அக்கறை அரசுக்கு இருப்பது உண்மையானால், போர் மூலம் சமாதானம் என்ற குழப்பகரமான சித்தாந்தத்தைக் கைவிட்டு, அரசியல் வழி மூலமே முழுக்க முழுக்க சமாதானத்தை எய்துவது என்ற கொள்கைக்கு நடைமுறைக்கு, அரசு திரும்ப வேண்டும்.

ஆகையால், நாம் தீர்விலும். சமாதானத்திலும் அக்கறையாகவே உள்ளோம் என்று கூறிக் கொண்டு பந்தை ஐ. தே. கட்சியின் பக்கத்துக்கு எறிய அரசு முனையக் கூடாது.

ஐக்கிய தேசியக் கட்சியும் தனது போக்கை மாற்றி, தேசியப் பிரச்சினையைத் தீர்த்து நாட்டை வளமாக்க ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இனியும் இழுத்தடிக்க முனையக் கூடாது.

# தமிழக அரசின் உதவியுடன்
# இலங்கையில் தமிழிசைக் கல்லூரி

சென்னை, செப்.3

இலங்கையில் பெரிய அளவில் தமிழிசைக் கல்லூரி ஒன்று தமிழக அரசின் உதவியுடன் அமைக்கப்படவிருக்கிறது.

சென்னை வந்திருந்த இலங்கை அமைச்சர் எஸ். தொண்டமான் இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் தமிழ்க்குடி மகனுடன் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இது தொடர்பாக இணக்கம் காணப்பட்டது.

தமிழிசை, ஆடற்கலை, நாட்டாரியல் ஆகிய மூன்று பாடங்களுடனும் தொடர்புடைய வகுப்புக்கள் இக் கல்லூரியில் நடத்தப்படும்.

இந்த வகுப்புக்களை நடத்துவதற்கான வல்லுநர் குழுவையும், பேராசிரியர்களையும் தமிழக தமிழ் வளர்ச்சித்துறை அனுப்பும்.

இலங்கையில் இக் கல்லூரி எங்கு அமையும் என்பது தொடர்பாக முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் ரெங்கமணி மெய்கண்டத்தேவன். இராம கிருஷ்ணன், தமிழ் வளர்ச்சி இயக்குநர் நாகராசன், இயல், இசை, நாடக மன்றத்தின் துணைச் செயலர் சொர்ணம், இசைக் கல்லூரி முதல்வர் சண்முக சுந்தரம், கலைத்தொழிற் கல்லூரி முதல்வர் பாஸ்கரன, ஆசியவியல் நிறுவன இயக்குநர் ஜோன் சாமுவேல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் இராமர் இளங்கோ, சிற்பக் கல்லூரி முதல்வர் ஞானசேகரன், அரச முதலித்திட்ட இயக்க ஒருங்கிணைப்பாளர் கொடுமுடி சண்முகம் ஆகியோர் இந்த ஆலோசனையில் கலந்து கொண்டனர்.

(உ - 3)

## மிருசுவில் இருளில்

நெல்லியடி, செப். 3

தென்மராட்சிப் பகுதியில் உள்ள மிருசுவில் வைத்திய சாலையில் பொருத்தப்பட்டிருக்கும் பாரிய ஜெனரேற்றர் கடந்த ஒரு மாத காலமாகப் பழுதடைந்த நிலைமையில் இருப்பதனால் மிருசுவில் வைத்தியசாலை இரவில் இருளில் மூழ்கியுள்ளது.

இந்த ஜெனரேற்றரின் உதவியுடன், மிருசுவில், கொடிகாமம், கச்சாய் எருவன் ஆகிய பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டு வந்தது.

தற்பொழுது ஜெனரேற்றர் பழுதடைந்த நிலைமையில் இருப்பதனால் இதற்கு மாற்று நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் தென்மராட்சி பிரதேசசெயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(உ-109)

## அன்னைதெரேசா நினைவு உரை

கொழும்புத்துறை, செப்,3

யாழ். திருமறைக்கலா மன்ற அரங்கில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு மன்ற மாதாந்த ஒன்றியமும் அதனைத் தொடர்ந்து அன்னை திரேசாவின் ஓராண்டு நினைவு உரையும் இடம்பெறும்.

(உ-30)

## உயர் பெறுமதி முத்திரைகள்

யாழ். பிரதம தபாலகத்துக்கு உயர் பெறுமதியுடைய ஒரு தொகுதி முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளன எனவும்—

உயர்பெறுமதியுடைய முத்திரைகளைப் பயன்படுத்துவோரும், இந்த முத்திரைகள் தேவைப்படுவோரும் தபாலகத்தில் இதனைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும்—

யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-9)

## கட்டடப் பொருளுதவி

குருநகர், செப். 3

மலசலகூட வசதிகளற்ற பாடசாலைகளுக்குஇவற்றை அமைப்பதற்கான கட்டடப் பொருள் உதவியை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலசலகூட வசதிகளற்ற பாடசாலை அதிபர்கள் இவ் உதவியைப் பெற விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிய வருகிறது.

(இ-51)

## சந்நிதியில் இன்று

யாழ்ப்பாணம், செப்.3

தொண்டமானாறுசெல்வச் சந்நிதி உற்சவகாலத்தை யொட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரமமண்டபத்தில் ஒழுங்குசெய்துள்ள தெய்வீகக்கலை நிகழ்ச்சிகளில்—

இன்று வியாழக்கிழமை பிற்பகல்3மணிக்கு மறவனூரரி, எம். வாசகர் வழங்கும் பக்திப் பாடல்கள், இன்னிசைக் கச்சேரி ஆகியன இடம்பெறும்.

(உ-7-30)

## விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

குருநகர், செப். 3

குருநகர்ப் பகுதியில் பரவி வரும் வடிசாராய உற்பத்தியையும், விற்பனையையும் தடைசெய்யும் நோக்குடன் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

குருநகர் சென். ஜேம்ஸ் கல்விக் கழகம் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்துள்ளதாக கழகத் தலைவர் மு. நெல்சன் தெரிவித்தார்.

(இ—51)

# ஒரு மாதத்தில் உடைந்த மதகின் பாதுகாப்புச் சுவர்
## திருத்த நடவடிக்கை இல்லை

யாழ்ப்பாணம், செப். 3

எட்டு இலட்சம் ரூபா செலவில் புதிதாக கடந்த மே மாதம் அமைக்கப்பட்ட மதகின் பாதுகாப்புச் சுவர் அந்த மதகு அமைக்கப்பட்டு அடுத்த மாதமே உடைந்து விட்டது.

நல்லூர் பிரதேசசபைப் பிரிவில் உள்ள திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் உள்ள மதகுச் சுவரே இவ்வாறு உடைந்த நிலையில் காணப்படுகிறது.

மேற்படி மதகின் பாதுகாப்புச் சுவர் உடைந்தமை பற்றி நல்லூர் பிரதேச சபைக்கு அப்பகுதி மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இன்னும் இரண்டு மாதங்களில் மழைகாலம் ஆரம்பமாகவுள்ளதால் அதற்கு முதல் இந்த மதகுச் சுவர் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(இ-7)

### இந்த அரசின் ஆட்சியில்
# ரயில்கள் தடம்புரண்ட சம்பவங்கள்- 2,500
## பாதை பராமரிப்பு இல்லை

கொழும்பு, செப். 3

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நான்கு ஆண்டு ஆட்சிக்காலத்தில் ரயில்கள் தடம் புரண்ட சம்பவங்கள் இரண்டாயிரத்து ஐந்நூற்றைத்தாண்டிவிட்டதுஎனறு ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்,

வருடாவருடம் ரயிற் பாதைகள் புனரமைக்கப்பட்டு பராமரிக்கப்படுவது வழமையென்றும்-- நீண்ட காலமாக இப்பணி மேற்கொள்ளப்படாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும்-- அவர் தெரிவித்தார்:

கடந்த 5வருட காலத்தில் வருட ரீதியாக ரயில் தடம் புரண்ட சம்பவங்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

94—706,95 - 533, 96--565, 1--97-- ஜூன் வரை--237

(உ-10-3)

## கலந்துரையாடல்

மானிப்பாய், செப். 3

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் விஞ்ஞானமாணி மற்றும் சிறுவணிகமுகாமைத்துவம்பட்டடப்படிப்பு நெறிகளுக்கு மாணவர்களைப் பதிவு செய்வது தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம்சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

(உ-90)

## நாளை

ஆவணி - 19

வெள்ளிக்கிழமை

திதி: திரயோதசி

முன்இரவு 08.39 வரை.

நட்சத்திரம்: திருவோணம்

முன்இரவு 08.08 வரை.

பிரதோஷவிரதம்

சுபநேரம்: 06 05 - 07 35

ராகுகாலம்: 10.35 - 12.05

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## உதயவாக்கு

ஒவ்வொரு நாளும் ஆண்டில் மிகச் சிறந்த நாள் என்று உங்கள் இதயத்தில் எழுதி வைத்துக்கொள்ளுங்கள்.

ஆர். டபிள்யூ எமர்ஸன்

## ஆப்கான்...

(நான்காம் பக்கத் தொடர்)

ரபாணியையே ஆப்கான் அரசின் சட்ட ரீதியான தலைவராக ஈரான் கருதி வருவதும் - குறிப்பிடத்தக்கது.

தனது நாட்டின் 11 இராஜதந்திரிகளையும், ஒரு பத்திரிகையாளரையும், 35 டிரக் சாரதிகளையும் தலிபான் தடுத்து வைத்திருப்பதாக ஈரான் குற்றஞ் சாட்டியுள்ளது.

தேவையானால் இவர்களை மீட்க பலத்தைப் பிரயோகிக்கவும் ஈரான் தயங்காது என்று ஈரான் இராணுவ ஜெனரல் ஒருவர் கூறியிருக்கின்றார்.

ஆப்கானின் வடக்கு நகரான மஸார் - ஈ - ஷரீபை தனது எதிரணியிடமிருந்து தலிபான் கைப்பற்றியபோது இந்த இராஜதந்திரிகள் காணாமற் போயினர்.

மேற்படி இராஜதந்திரிகள் குறித்து தமக்கு எதுவும் தெரியாது எனக் கைவிரிக்கும் தலிபான் அவர்கள் இறந்திருக்கக் கூடும் எனக் கருத்து வெளியிட்டுள்ளது.

அதே நேரம் 30 ஈரானியர்களை தான் காவலில் வைத்திருப்பதை ஒப்புக் கொண்டுள்ள தலிபான், அவர்கள் தமது எதிரிகளுக்கு ஆயுதங்களைப் பெற்றுக் கொடுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்ததாகக் குற்றஞ் சுமத்தியது.

தலிபான் அமைப்புக்கு பாகிஸ்தானும் —

தலிபானுககு எதிரான இராணுவபபோக்கள எதிரணிகளுக்கு ஈரானும் —

இராணுவ உதவிகளை வழங்கி ஊக்கப்படுத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

## சாயி சிந்தனை

நீ சினத்துடன் இருக்கும் போது, நீ மகிழ்ச்சியுடன் இருக்க இயலாது. நீ சினத்தை விலக்கும் போது, உனக்கு மகிழ்ச்சியும் ஆனந்தமும் கிட்டுகின்றன. சினம் மனிதனின் மிகப்பெரும் எதிரி. சினம், உனது உடல் நலம், செல்வம், மேன்மை அனைத்தையும் குலைக்கிறது. மனிதாகள் உனது எதிரிகளாக மாறுகிறார்கள். சினம் காரணமாக, மனிதன் ஒவ்வொன்றையும் இழக்கின்றான். வெல்லுவதற்குப் பதிலாக தோல்வியடைகிறான். அனைதுதுப் பாவச் செயல்களிலும் ஈடுபடுகிறான். சினம் ஒருவனது எதிரி. தனக்குள் சினம் நிறைந்தவன் மகிழ்ச்சியோ, ஆனந்தமோ அனுபவிக்க இயலாது. சினம் வீட்டினுள் இருக்கும் பாம்பு போன்றது. உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் சினம் பரவியிருந்தால் புத்தி, நட்பு, சக்தி அனைத்தும் குறைகின்றன. 1—3 மாதங்களில் ஏற்றுக் கொண்ட உணவினால் ஏற்பட்ட வலிவு அனைத்தும் சினத்தின் ஒரு சுழற்சியில் வீணாகி விடுகின்றது. சினத்தின் காரணமாக இரத்தம் கெடுகிறது. அது பழைய நிலைக்கு வர மூன்று மாதங்கள் ஆகின்றன.

ஆதாரம்: சாயி அருளமுதம்
கோடை 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சைவசமய பழைய புதிய (தமிழ்) நூல்கள் விற்பனைக்கு உண்டு; விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்: க. இராசரத்தினம், 135, சிவன் கோயில முன்பாக, நல்லூர், யாழ்ப்பாணம். (58877)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி — நல்லூர் (மூத்த விநாயகர் கோயிலுக்கு அண்மையில்) பிரதான வீதியில் 4½ பரப்பு குடியிருப்பு நிலம் கறகட்டுக் கிணற்றுடன் உடனடி விற்பனைக்கு உண்டு. இ. சங்கர், பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (58870)

### யாழ்ப்பாணம்

அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நூல்கள் 1. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகநூல் 2. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். இடம்பெயர்தலின் கதை 3. நாடகம்எழுதுவது எப்படி? என்று விளக்கிக் கூறும் நூல் 50/- [58819]

### மணமகள் தேவை

கம்பியூட்டர் என்ஜினியராக மத்திய கிழக்கில் தொழில் புரியும் மாதம் ரூ. 5,000 வருமானம் பெறும், கொழும்பில் வசதியான சொந்த வீடு, வாகனம் உடைய 36 வயது பொது நிற 5' 7'' அங்குலம் உயரமுடைய மணமகனுக்கு கொழும்பில் வதியும் பெற்றோர் நல்ல சிவந்த நிறமும், அழகும், படிப்பும், குணமும் பொருந்திய மணமகளைத் தேடுகின்றனர். உடன் தொடர்பு கொள்ளவும். முதற் கடிதத்திலேயே முழு விவரமும், அண்மையில் எடுத்த புகைப் படமும் அனுப்பவும் பொருத்தமற்றவை திருப்பி அனுப்ப்படும். தொடர்பு: இல. 778, மே/பா உதயன். (58878)

### பேடடுக குஞ்சு

ஒரு கிழமை வளர்ச்சி அடைந்த பிறிமா கைலைன் பிறவுண் பேடடுக் குஞ்சுகள், பிறிமா புறோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. மல்லிகாபதி, சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். (58882)

### கோழி மருந்து

06—09—98 ஞாயிற்றுக்கிழமை காலை 10–00 மணியளவில் கோழிக்குஞ்சுகளுக்கான கம்புறோ மருந்து வழங்கப்படும். தேவையானோர் உடன் வந்து பெற்றுக் கொள்ளவும்: மல்லிகாபதி, சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். (58881)

### தேவை

கொத்து ரொட்டிக் கடைக்கு கொத்துரொட்டியும் வேறு உணவுகளும் தயாரிப்பதில் நல்ல அனுபவம் உள்ளவர் தேவை. அத்துடன் அரைக்கும் ஆலை இயந்திரங்களும் தேவை. C/O உதயன் 777, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(58875)

### விண்ணப்பப் படிவம்

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பல வெற்றிடங்கள் உண்டு. அதற்கான படிவம் விற்பனையாகிறது. தபாலில் பெறுவதாயின் ரூபா 6 பெறுமதியான முத்திரை அனுப்பவும். நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

(58825)

## யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

[வ–து]

291, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

02 - 09 - 98

## பகிரங்க ஏல விற்பனை

''கொண்டா'' சி ஜீ. 125 மோட்டார் சைக்கிள் (புதியது)

சமாசத்துக்குச் சொந்தமான கொண்டா சி. ஜீ. 125 மோட்டார் சைக்கிள் [புதியது] எதிர்வரும் 13 09-1998 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாசபபணிமனையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

குறிப்பு:

1. ஏல விற்பனையின் போது கூடுதலான விலை கேட்பவருக்கு விற்கப்படும்.
2. வாங்குபவர் பணத்தினை முழுமையாகச் செலுத்தி அன்றையதினமே மோட்டார் சைககிளை எடுத்துச் செல்ல வேண்டும்.
3. மோட்டார் சைக்கிளைப் பார்வையிட விரும்பின் அலுவலக நேரத்தில் [காலை 9-00 மணி- 4-30 மணி வரை] பார்வையிடலாம்.
4. ஏலவிற்பனை தொடர்பாக சகல நடவடிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளவும். நிராகரிக்கவும் முழுமையான அதிகாரம் நிர்வாகத்திற்கே உண்டு.

பதில் மாவட்ட செயலாளர்,
யாழ். மாவட்ட சி. க கூ. ச. சமாசம்,
யாழ்ப்பாணம்.

[சி-4744]

# இரத்த வங்கிக்கு குளிர்சாதன கருவி

யாழ்ப்பாணம், செப். 3

யாழ். போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கிக்கு ஒரு குளிர்சாதனப் பெட்டியும், மின் தாழ்வு வெப்ப நிலை குளிர்சாதன உபகரணம் ஒன்றும் வழங்குவதற்கு வட மாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை இணங்கியுள்ளது.

இந்த இரத்த வங்கியில் அதிகளவு இரத்தத்தைப் பாதுகாத்து வைப்பதற்கான வசதிகளற்ற நிலை நீண்ட காலமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

தற்போது இருக்கும் சிறிய குளிர் சாதனப்பெட்டி மூலம் 50 பைந் இரத்தத்தை மட்டுமே பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(உ–5)

# விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 3

கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் 1998 ஆம் ஆண்டுக்கான கலா பூஷண விருதுக்கு தெரிவு செய்யப்பட்டு கொழும்பு சென்று அந்த விருதினைப் பெற முடியாத ஆறு பேருக்கும்—

கொழும்பு அருள்நெறி விழாவில் இடம்பெற்ற கௌரவிப்பு விழாவில் விருதினை நேரில் சென்று பெற முடியாத மூன்று சமய நூல் எழுத்தாளர்களுக்கும் —

இம் மாதம் 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் வைத்து அந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

யாழ். அரசாங்க அதிபரினால் வழங்கப்படவுள்ள இவ் விருதுகளைப் பெறுபவர்களின் விவரம் வருமாறு:-

கலா பூஷணவிருது

க. நா. கணபதிப்பிள்ளை, பே. சந்திரசேகரம், கு. பாலசிங்கம், திருமதி அ. இ. மரியாம்பிள்ளை, ந. செல்லத்துரை அமுருகவேள்.

இந்துமத எழுத்தாளர் விருது

திருமதி கலைவாணி இராமநாதன், சி. விநாசித்தம்பி, புலவர் பொன். கந்தசாமி.

மேற்படி விருதுகளுக்குரியவர்கள் அன்றைய தினம் அவற்றை நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

(உ–5)

## வாடகைக்கு கடை

கண்டி வீதி, 592, இலக்கத்தில் பஸ்தியன் சந்தியில் உள்ள மேல்மாடியுடனான கடை ஒன்று உடனடியாக வாடகைக்கு விடப்படவுள்ளது.

தொடர்பு: தாசன்

(58880)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**A | L 2000**

ஆண்டுக்கான
4ஆவது பாடமாகிய
Common
General Paper

ஆரம்பம்:
05 - 09 - 1998
காலை 9–00 மணி

ஆசிரியர்:
அ. குமாரவேல்

(58845)

இலகுவாக பேச,
எழுத, வாசிக்க ...

**சிங்களம்**

புதிய பிரிவு - II
ஆரம்பம் 05 - 09 - 98
சனி 1 மணி

ஆசிரியர்
திரு சூரி

A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கும், வேலை செய்பவர்களுக்கும் ஏற்ப நேரம் மாற்றித்தரப்படும்.

**D M.I**

ஸ்ரான்லி வீதி
யாழ்.

D. SAM

(சி – 4705)

## அந்தியேட்டிக்கிரியை அழைப்பு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 09 | | 05 |
| — | | — |
| 03 | | 08 |
| — | | — |
| 1910 | | 1998 |



## அமரர் வைரப்பிள்ளை வெற்றிவேல்

(மாஸ்ரர்)

எமது குடும்பத்தின் குலவிளக்கு அணைந்த போது ஓடோடி வந்து ஆறுதல் கூறி இறுதிச் சடங்கில் பங்குபற்றி பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை (04-09-1998) நடைபெற இருப்பதால் அதிலும் கலந்து கொண்டு அதைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் பழைய மாணவர், நலன்புரிச்சங்கத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இரத்தினராசா குடும்பத்தினர்

பூதராயர் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(சி – 4745)

# Modern Education Centre

Nelliady, Karaveddy.

## 99 A/L DAY CLASSES

ஆரம்பம்:- 02-09-98 புதன் மாலை 3 மணிக்கு

| | |
|---|---|
| பௌதிகவியல்: | திரு. குமரன் |
| இரசாயனவியல்: | திரு. வசீகரன் |
| விலங்கியல்: | திரு. கெங்காதரன் |
| தூய பிரயோக] கணிதம் | திரு. வெக்ரர் வேலாயுதம் |

# Science Centre

Nelliady, Karaveddy.

## 99 A|L DAY CLASSES

இரசாயனவியல்: திரு. சிவத்திரன்

தூய பிரயோக] கணிதம்: திரு. ரவி

- ★ நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- ★ A/L 2000 இற்கான கணித, உயிரியல் வகுப்புகளும் நடைபெறுகின்றன.

-- நிர்வாகி

(சி/4734)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டன

2-9-98 அன்று இரத்மலானை விமான நிலையத்தில் 2 ஆவது விமானப் பிரயாணத்தின்போது பொருள்கள் பரிசோதனை செய்யும்இடத்தில் மூக்குக் கண்ணாடியும், கடிதங்களும் சொப்பிங்பாக்குடன் தவறிவிட்டன. தவறுதலாக எடுத்தவர்கள் தயவு செய்து இல: 19/1, B. A. தம்பி ஒழுங்கை, வண்ணார் பண்ணை என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(58901)

# மரண அறிவித்தல்கள்

## மேரிமாகிறற் (இரத்தினம்)

மேரிமாகிரற் (இரத்தினம்) கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வலோரி பஸ்தியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், பவளம், சோதி, றுக்மணி, மகேந்திரன், பெனோ, காலஞ்சென்ற ராஜன் மற்றும் பபா, சுவினிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான வேதநாயகம். நடராசா, சிறில் மற்றும் இம்மானுவல், ராணி, றெஜிஸ், ஆன்மேரி, யசிந்தா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (3-9-98) பிற்பகல் இல-15, 11 ஆவது ஒழுங்கை, கொட்டாஞ்சேனை வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு – 13 இல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. ஞானேந்திரன்
(பேரன்)

37, 5 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(58897)

## சிவசம்பு சரவணபவானந்தன்

(இளைப்பாறிய ஆசிரியர் அச்சுவேலி ம. வி., வவுனியா தமிழ் ம. வி.)

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 3. 9 1998 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 12 30 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
திருமதி சௌ. சரவணபவானந்தன்
(மனைவி)

227, கோயில் வீதி,
நல்லூர்.

(58895)

## திருமதி சௌபாக்கியம் சேதுராசா

சுதுமலை தெற்கைச் சேர்ந்த திருமதி சௌபாக்கியம் சேதுராசா 31 – 08 – 98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சி. சேதுராசாவின் அன்பு மனைவியும், ஆனந்தராஜா (ஜேர்மனி), குகராஜா (கொழும்பு), செந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி (ஜேர்மனி), புஷ்பானந்தி, சந்திரகுமார் (சாருஜன் உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியா, ஷிராணி (ஜேர்மனி , தர்மிகா, விவேகா, சாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை பி. ப. 2 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
செ. சந்திரகுமார்
(மருமகன்)

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(சி/4749)

## சூசைப்பிள்ளை மாக்கிறேற்

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய பங்கில் வதிவிடமாகவும், 372, பாங்சால் வீதி, குருநகர் யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக வசித்தவருமான சூசைப்பிள்ளை மாக்கிறேற் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், திரு அல்வினஸ், திரு அலோசியஸ்தாசன், திரு யோண் அரியதாஸ், திருமதி அ. அமலசோதி, செல்வன் ஜெனோஸியஸ் (யோய்), திருமதி ஜெ. மேரிறோஸ், செல்வி சூ. யூடிஸ்கொவனிக்கா (யாழ். தி. கு. க. ஆங்கிலப் பாடசாலை, ஆசிரியை), அருட்தந்தை அல்றின் (அ. ம. தி), செல்வி சூ. நொய்லின் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திரு அலன்றோஸ் (அன்ரோ), திரு ஜெறாட் (பிரான்ஸ்), திருமதி அ. மேரிலூசியா, திருமதி அ. இமல்டா புஸ்பம், திருமதி யே. மேரி மல்லிகா (புனித பத்திரிசியார் கல்லூரி, ஆசிரியை) ஆகியோரின் அன்புமாமியாரும், செல்வி. அ. அலோடியா, செல்வி அ. ஆன்அலன்ரீனா, செல்வி அ. குயின் அலன்ரீனா (யாழ். தி. கு. க ஆங்கில பாடசாலை), மரியறாஜ், அன்ரனி றாஜ், அருள்றாஜ், அலன் பீற்றர் (புனித பத்திரிசியார் கல்லூரி), இக்னேசியஸ் றொஜ, ஜேரி அமேலா, மாகிறேறகதரீன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அருட்தந்தை ஞா. அற்புதராஜாவின் (அ. ம. தி) பெரியதாயாரும், அருட்தந்தை வெ. ஜெறோமின் [அ. ம. தி] மாமியாரும் ஆவார்.

இவரது நல்லடக்க திருப்பலி யாழ். மரியன்னை பேராலயத்தில் இன்று [03 09 98] வியாழன் மாலை 4 மணிக்கு [புதிய நேரம்] ஒப்புக்கொடுக்கப்படும்.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்தந்தை சூ. அல்றின்
[அ. ம. தி]

தற்காலிக முகவரி:
372, பாங்சால் வீதி,
குருநகர்.

[58900]


2000 - உயிரியல்
"உயிர்ப் பல்வகைமை"
Mr. S. திவாகரன்
Che. Mr. மகேஸ்வரன்
Phy. Mr. ஸ்பெல்மன்
99 = HEAT

★ 2000 புவியியல்
★ 99 புலமைப் பரிசில் = 5
★ Yr. 8, 9, 10 & 11

SHAMROCK

(சி/4750)



பலரின் வேண்டுகோளுக்கிணங்க
யாழ். நகரில்

OXFORD ENGLISH ACADEMY

ஆரம்பம் 07-09-98
முற்பகல் 11 மணி
(அனுமதியை நாவலர் வீதியில் உள்ள பொருளியல் கல்லூரியில் முன்கூட்டியே பெறவும்)

நெல்லியடியில்
2ஆவது பிரிவு
ஆரம்பம் 07-09 98
(அனுமதியை MATHS CENTRE இல் முன்கூட்டியே பெறவும்)

பருத்தித்துறையில்
(சுப்பர் மடம்)
6ஆவது பிரிவு
ஆரம்பம் 05 09-98

BY
Mr B. JOTHY
(B Com (Hons))

(அனுமதியை முன்கூட்டியே பெறவும்)

(58886)


# நேர்முகப் பரீட்சைக்கு இன்று அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், செப். 3

யாழ். செயலகத்தில் பல்வேறு பதவிகளுக்கு நேர்முகப் பரீட்சைகள் இன்று பிற்பகல் 2 மணிமுதல் நடைபெறவிருப்பதாக யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு வருவோர் கல்விச் சான்றிதழ்களுடன் வருமாறு கோரப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

பரராஜசிங்கம் சித்திராதேவி (நயினாதீவு), சபாரத்தினம் மங்களேஸ்வரி (கோப்பாய் வடக்கு), நாகமணி ரதீஸ்குமார் (கோண்டாவில் வடக்கு), சுந்தரலிங்கம் ஞானேஸ்வரி (கோப்பாய் தெற்கு), என். பிரபாகரன் (கொட்டடி), செல்வநிதி செல்வரட்ணம் (திருநெல்வேலி), பிரதீபன் சுபாஜினி (வரணி), ஜோகினி திசவீரசிங்கம் (சுதுமலை மத்தி), கனகராசா ஜெயந்தன் (சுதுமலை தெற்கு), நாகராசா ரஞ்சித்குமார் (கொக்குவில் மேற்கு), முத்துலட்சுமி விநாயகமூர்த்தி (வட்டு. வடக்கு), தயாபதி இராஜரத்தினம் (கோண்டாவில் கிழக்கு),

நடராசா தேவா (யாழ்.) வசந்தராஜா விஜிதா (உரும்பிராய் தெற்கு), சிவராசா ஸ்ரீதரன் (பருத்தித்துறை), ப. பிரதீபன் (யாழ்ப்பாணம்), சு. ஸ்ரீகாந்தன் (யாழ்ப்பாணம்), அ. மி. பாலேந்திரா (யாழ்ப்பாணம்), சூ. றே. யோகேந்திரா (யாழ்ப்பாணம்), ச. சதீஸ்கரன் (நல்லூர் வடக்கு), சு. சத்திநாதன் (இணுவில் கிழக்கு), அ. பத்மராஜ் (யாழ்ப்பாணம்), சு. சந்திரகுமார் (கொக்குவில் மேற்கு), ப. உதயணன் (அரியாலை), முத்துலிங்கம் ஸ்ரீஸ்கந்தராசா (ஆனைக்கோட்டை).

(இ-3)


விக்னா
கல்வி நிறுவனம்

கணக்கியல்
திரு. பாலவாசன்

A/L 2000
தனிவியாபார முடிவுக் க/கு
(1–2 p m.)

A/L 99
பங்கு வழங்கல்
(2 — 3 p. m.)
கட்டுப்பாட்டுக் க/கு
(3 –4-30 p. m.)

ஆரம்பம்:
05 – 09 – 1998

[58894]



ST. ANTONY'S ACADEMY

தமிழ், ஆங்கிலம்
தட்டச்சு,
சுருக்கெழுத்து
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.

கற்க விரும்புவோர் முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்துகொள்ளவும்.

50, DAVID ROAD,
JAFFNA.

(58892)



புதிய
தொழிற் பயிற்சிகள்

ELECTRICAL WIRING
(House Wiring)

காலம் 3 மாதங்கள்
ஆரம்பம் 04 - 09 - 98
காலை 9 00 மணி

அதிக செய்முறை வகுப்புக்களுடன்

தொடர்பு:
A. RAKAVAN
CASIO INSTITUTE
KALVIYANKADU

(C/4746)



BITSMANS கல்வி நிறுவனம்
மானிப்பாய்

A/L 99 PAPER CLASS
கணித, உயிரியியல் வகுப்புக்கள்

| | |
|---|---|
| தாவரவியல்: | திரு. பாலா |
| விலங்கியல்: | திரு. ஞானேந்திரன் |
| பௌதிகவியல்: | திரு. ஜெயசீலன் |
| இரசாயனவியல்: | திரு. சிவத்திரன், எட்வேட் |
| தூயபிரயோககணிதம்: | திரு. ஐங்கரன் |

ஆரம்பம்: 05-09-1998
சனி காலை 10.00 மணி

(58888)



உ
சிவமயம்

மங்களகரமான திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் ஆவணி மீ 18 ஆம் நாள் வியாழக்கிழமை [03-09-1998] காலை 8.12 மணி முதல் 9 46 மணி வரையுள்ள சுபவேளையில்

அரவிந்
ARAVINTH
வீடியோ புகைப்பட சேவை

என்னும் புகைப்பட ஸ்தாபனத்தை ஆரம்பிக்க இருப்பதால், அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் யாவரும் வருகை தந்து இவ்விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
திரு. திருமதி கு. ஸ்ரீரங்கநாதன்

293 (431), நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(சி/4751)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைப்...

(முதலாம் பக்கத் தொடர்)

னார்.

அதேநேரம் — ஐ. தே. க. வின் பிரசாரக் கூட்டம் ஒன்று அளுத்கடையில் நேற்று நடந்தபோது அப்பகுதி தமிழ்மக்கள் ரணிலுக்குப் பொன்னாடை போர்த்தினார்கள்.

"ஆட்சிக்கு வந்ததும் உடன் யுத்தத்தை நிறுத்துவேன்" என்று அங்கு பேசுகையில் ரணில் தெரிவித்தார். (இ-3)

## முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆகியவற்றின் முன்பாக கடந்த 23 நாள்களாக இடம்பெறும் மறியல்போராட்டத்தால் அவை செயலிழந்துள்ளன.

கிளிநொச்சி செயலகம், பாண்டியன்குளம், துணுக்காய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களும் மறியல் போராட்டம் காரணமாக கடந்த 27 நாள்களாக செயல் இழந்துள்ளன. (இ-3)

# ரெலிக்கொம் நிலையத்தை தகர்ப்பதற்கு முயற்சி

## 5 கிலோ குண்டு மீட்பு

கொழும்பு, செப். 3

ஹிக்கடுவவில் உள்ள ரெலிக்கொம் தொலைத்தொடர்பு நிலையத்தைக் குண்டு வைத்து தகர்க்க எடுக்கப்பட்ட முயற்சி கைகூடவில்லை எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை சிலர் அந்த நிலையத்தை நோக்கி வந்ததைக் கண்டபோது அங்கு நின்ற காவலாளி சத்தமிட்டதாகவும் —

வந்தவர்கள் குண்டை வீசிவிட்டு ஓடி விட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

வெடிக்காத நிலையில் இருந்த 5 கிலோ நிறையுடைய அந்தக் குண்டை மீட்ட பூஸா இராணுவ முகாமில் உள்ள நிபுணர்கள் அதைச் செயலிழக்கச் செய்தனர். (இ-3-6)

## இலங்கைத்...

(முதலாம் பக்கத் தொடர்)

பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக இரு குழுக்களுக்கிடையில் எழுந்தபிரச்சினை கோஷ்டிச் சண்டையாக மாறியதாக பொலீஸ் விசாரணையில் தெரியவந்தது.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட சூரிச் பொலீஸார் 20 இலங்கைத் தமிழர்களை கைது செய்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் சூரிச் பொலீஸ் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-3)

# சமய சந்நிதிகளில்

கோண்டாவில் மேற்கு குமரகோட்டம் அருள்மிகு சித்திவைரவர் அம்பாள் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தீர்த்தத்திருவிழா நாளை காலை 7 மணிக்கும், பூங்காவனத் திருவிழா நாளை மறுதினம் மாலை 4 மணிக்கும் இடம்பெறவுள்ளது.

★ ★ ★

மட்டுவில் வடக்கு சந்திரபுரம் காளி தேவஸ்தான வருடாந்தமணவாளக்கோல விழாவை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன. (இ-31)

★ ★ ★

வடமராட்சி, செப். 3

மேலைப் புலோலி தொப்பிளாவத்தை நரசிம்ம வைரவர் கோயில் மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (இ-173)

# மாடுகள் தொல்லை

கொழும்புத்துறை, செப். 3

சுண்டுக்குளிப் பகுதியில் கட்டாக்காலி மாடுகள் இரவில் திரிந்து வீடுகளில் உள்ள மரக்கறிப் பயிர்களையும், வாழைகளையும் சேதப்படுத்தி வருவதால் வீட்டுத் தோட்டம் செய்பவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-30)

# துர்க்கையம்மன் உற்சவத்தையொட்டி விசேட பஸ் சேவை

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய தேர் உற்சவத்தையொட்டி இன்று யாழ். பஸ்நிலையத்திலிருந்து தெல்லிப்பழை வரை விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

769, 764 இலக்க பஸ்கள் இந்த விசேட சேவையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மானிப்பாய் பொன்னாலை, இளவாலை ஆகிய பகுதிகளிலிருந்தும் இன்று தெல்லிப்பழை வரை விசேடபஸ் சேவைகள் நடைபெறவுள்ளன. (இ-ரி-6-5)

# வானொலியில் ஆலய நிகழ்வுகள் அஞ்சல்

யாழ்ப்பாணம், செப். 3

செல்வச்சந்நிதி ஆலய ரதோற்சவத்தை யொட்டிய சிறப்பு நிகழ்ச்சி எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 6 மணிக்கும் —

சாவகச்சேரி கல்வயல் கற்குழி ஸ்ரீ வீரபத்திர சமேத பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற கும்பாபிஷேக நிகழ்வு தொடர்பான தொகுப்பு நிகழ்ச்சி எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 6 மணிக்கும் —

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையில் ஒலிபரப்பாக விருக்கின்றன.

இந்த நிகழ்ச்சிகளை நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ரி. உருத்திராபதி தயாரித்து வழங்குகிறார். (இ-3)

## செம்மணிப்...

(முதலாம் பக்கத்தொடர்)

கூறினார்.

ஏற்கனவே பொஸ்னியாவிலும் றுவாண்டாவிலும் ஐ. நா. நிபுணர்களின் உதவியுடன் மனித புதைகுழிகள் தோண்டப்பட்டதால், செம்மணிப் புதைகுழி தோண்டுவதிலும் ஐ. நா. நிபுணத்துவ உதவி அவசியமானது என்று கருதப்படுகிறது.

அதேநேரம்— செம்மணிப் புதைகுழி தொடர்பான தகவலை வெளியிட்ட சிப்பாயான சோமரத்தின ராஜபக்ஷ சிறைச்சாலையில் தாக்கப்பட்டதையடுத்து, கூடுதல் பாதுகாப்புடன் வெலிக்கடையில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

# புலி உறுப்பினர் மரணம்

வவுனியா, செப். 3

யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் தமது உறுப்பினர் ஒருவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

மேஜர் சுந்தரமூர்த்தி [ஆழ்வாப்பிள்ளை குணதாசன்—யாழ்ப்பாணம்] என்பவரே உயிரிழந்தவராவார். [இ-3


இதோ!

3 ஆவது புதிய பிரிவு

SPOKEN ENGLISH WITH GRAMMAR

LECTURES BY:

MR. M. A. HARI

ஆரம்பம்: 05-09-1998

சனிக்கிழமை காலை 9-00 மணி

SATURDAY
SUNDAY ] 9.00 — 10.00 A. M.

★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. முந்துங்கள்!

DIRECTOR

HARY'S INSTITUTE

KONDAVIL EAST, KONDAVIL. (58899)



★ புதுக்கடைத் திறப்பு விழா ★



★ V. S. B. GROUP ★

(சில்லறை மொத்த வியாபாரிகள்)

வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள் 20 ஆம் நாள் (05 09-1998)

சனிக்கிழமை பகல் 10.50 முதல் 12. 50 மணி வரையுள்ள

விருச்சிக லக்கின சுபவேளையில் மேற்படி நிறுவனம்

99, 105, மின்சார நிலைய வீதியில்

உயர்திரு. சி. வி. கந்தையா சிவஞானம் அவர்களால்

ஆரம்பித்து வைக்கப்படும் என்பதனைத் தெரியத் தருவதோடு அத்தருணம் எமது அன்பு வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



V. S. B. GROUP
275, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

நன்றி

பங்காளர்கள்.

★ புதுக்கடைத் திறப்பு விழா ★

மென்டிஸ் அன் கொம்பனியினரின் மதுபான தயாரிப்புகளின்

யாழ். குடாநாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள்:



NEW PARADISE

புதிய சொர்க்கம்

173, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள் 20 ஆம் நாள் (05 – 09 – 1998)

சனிக்கிழமை பகல் 10. 50 முதல் 12. 50 வரையுள்ள விருச்சிக லக்கின சுபவேளையில்

உத்தரவுபெற்ற மதுபான மொத்த விற்பனை நிலையம் ஒன்று எம்மால்

திறக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரியத்தருகின்றோம்.

அத்தருணம் இனிய வாடிக்கையாளர்களும், நண்பர்களும் வருகை தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

உத்தரவு பெற்ற மதுபான விற்பனையாளர்களுக்கு மட்டும் விற்பனை மேற்கொள்ளப்படும்.

(சி/ 4748) நன்றி நிர்வாகிகள்.



இப்பத்திரிகை ஈழநாடு உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பதிப்பகத்தில் 03-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org